விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

ஜசுபி பழரச தொழிற்சாலை

எமது பழரச தொழிற்சாலையின் தேவைக்காக உள்ளூர் உற்பத்தி -யாளர்களிடம் இருந்து தரமான மாம்பழம், திராட்சைப்பழம், நீத்துக்காய் என்பன கொள்வனவு செய்யப்படுகின்றன. (C-2006)

தொடர்பு கொள்ளவேண்டிய
T.P.No -0212256065
விலாசம் :- ஆலடி, மானிப்பாய் வீதி, உடுவில்

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 24 திங்கட்கிழமை (07.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

# வலி.வடக்கில் வளம் கொழிக்கும்
# பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்பில்

## நேரில் பார்த்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் கருத்து

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் வளம் கொழிக்கும் பிரதேசங்களைத் தொடர்ந்தும் இராணுவத்தினர் தம்வசம் வைத்திருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வலி. வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)



### கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை
## நானே தெரிவேன் மகிந்த கருத்து

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் தன்னாலேயே தேர்ந்தெடுக்கப்படுவார் என முன்னாள் ஜனாதிபதிபதி மகிந்த ராஜபக்ஷ 23☛

### புலம் பெயர் மக்களின்
## உதவியை பெற அரசு விரும்பவில்லை
### வடக்கு முதல்வர்

(யாழ்ப்பாணம்)

புலம் பெயர் தமிழ் மக்களின் உதவிகளை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பெற்றுக்கொள்வதை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லையென வடக்கு 23☛

# மக்களின் காணியை விட்டு இராணுவம் வெளியேறாவிட்டால் போராட்டம் வெடிக்கும்

## முதலமைச்சரிடம் மயிலிட்டி மக்கள் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இராணுவம் மக்களின் காணிகளை விட்டு விரைவாக வெளியேற வேண்டுமென முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டிய மயிலிட்டி மக்கள், அவ்வாறு இல்லை என்றால் தமது காணி விடுவிப்பு போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்துள்ளனர்.

சுமார் 30வருடங்களுக்கு மேலாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் மயிலிட்டிப் பிரதேசத்திற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்று (06.05.2018) விஜயம் செய்திருந்தார்.

மயிலிட்டி பிரதேசத்தின் பொது மக்களை சந்தித்த முதலமைச்சர் மக்களுடைய குறைகளை 24☛

### சுற்றுலா பயணிகளுக்கு
## ஜூன் முதல் வரிச் சலுகை

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகள் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கான பெறுமதி சேர் வரியை மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என இறை வரித்திணைக் 23☛

## இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழ்க் கட்சிகள் மோதுகின்றன

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முரண்பாடுகள் உள்ள போதும் இருவரும் இணைந்தே ஆட்சி நடத்துகின்றனர். எனினும் தமிழ் மக்களின் இனப் 23☛



## முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் அரசியல்வாதிகள் வரவேண்டாம்

### காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் அரசியல்வாதிகள் வருவதை தாம் விரும்பவில்லையென மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி மனுவல் உதையச்சந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். 24☛

## தெற்கில் இன்று தொழிலாளர் தினம்

(கொழும்பு)

தெற்கில் அரசியல் கட்சிகளால் இன்று தொழிலாளர்தினம் கொண்டாடப்படவுள்ளது.

மே முதலாம் திகதி கொண்டாடப்படும் தொழிலாளர் தினத்தை வெசாக் பண்டிகையை முன்னிட்டு மே 7ஆம் திகதி கொண்டாடுமாறு அரசாங்கம் 24☛

# மகிந்த ஆட்சியில் பெற்ற கடன்களை கூட்டு அரசாங்கம் செலுத்துகின்றது

## ஐ.தே.க. மே தினத்தில் பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் தற்சமயம் கிரமமாக மீள செலுத்தப்படுகிறது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், ஐக்கிய தேசிய கட்சி நாட்டின் கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளை மேம்படுத்தியது.

சட்டம் ஒழுங்கு முறையாக உறுதிப்படுத்தப்பட்டமை 24☛

## முகவரி கேட்பது போல் பாசாங்கு செய்து பெண்ணின் சங்கிலி அறுப்பு

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

முகவரிகேட்பது போல் பாசாங்கு செய்து பெண்ணொருவரின் சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் ஒன்று யாழில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் (ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமையில்) உள்ள வீட் 24☛



### பிரதமருடன் - ஈ.பி.ஆர்.எல்.எப் ஒப்பந்தம் செய்தது
## ஒப்பந்தக்கடிதத்தின் மூலப்பிரதிகளை மக்களுக்கு காட்டினார் சிவசக்தி ஆனந்தன்

(வவுனியா)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டதாக, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, பாவக்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## ஜெயராசா ஜெயரூபன்

பிறப்பு 26 - 10 - 1973



இறப்பு 05 - 04 - 2018

வசாவிளான் மேற்கு குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராசா ஜெயரூபன் 05.04.2018 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயராசா-லீலாவதி தம்பதியரின் பாசமிகு மகனும், சிவஜோகினியின் அன்புக் கணவனும், காலஞ்சென்ற ஓங்காரசோதி-தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-இலட்சுமி, வைரமுத்து-செல்லம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான ஜெயக்காந்தன், ஜெயரேவன் மற்றும் ஜெயமலர், ஜெயசோபனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசீலன், மெசியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், குணசேகரம், மகாலிங்கசிவன், அமிர்தலிங்கம், சற்குணமூர்த்தி, விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் ஜெயபவானி, சாந்தகுமாரி, ஸ்ரீஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், தவமணி, சிவநேசன், சிவகுமார், காலஞ்சென்ற சிவபாதம் ஆகியோரின் மருமகனும், டில்விசன், டிரோன், செரோன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2018) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 1.00 மணிக்கு இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் தெற்கு,**
**மாதா கோவிலடி.**

**தகவல்:-குடும்பத்தினர்**
**0771660014**

(சி-2517)

## அமரர் கருணானந்தன் எலிசபெத்



கரம்பனை பிறப்பிடமாகவும் அணிஞ்சியன்குளம் 2-ம் பகுதியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் கருணானந்தன் எலிசபெத் அவர்கள் 06.05.2018 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கருணானந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை-அன்னம்மா தம்பதியினரின் கனி ஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற அப்பாத்துரை-பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும், சிவாகரன் (யூட்) (ஆசிரியர்-யாழ்/சுழிபுரம் விக்டோரியா கல்லூரி), சிவாஜினி, பிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபா ரூபன். சிவகௌரி-(ஆசிரியர்-மு/ஆறுமுகம் வித்தியாலயம் ஒட்டுசுட்டான்) வெள்ளிராஜ் ஆகியோரின் மாமியாரும் கவிஸ்கா, தனுரதன். சுதர்மிகா, சர்மியா, யதுர்சன், டிலக்ஷனா, டினக்ஷன், சர்மினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2018) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று அணிஞ்சியன்குளம் சேமக்காலையில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அணிஞ்சியன்குளம்,**
**மல்லாவி.**

**தகவல்:மகன்**
**0773934719**

(சி-2518)

# சமூக விழிப்புணர்வு செயற்திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

"வன்முறையை தவிர்ப்போம் போதையை ஒழிப்போம்" எனும் தொனிப்பொருளில், சமூக விழிப்புணர்வு செயற்திட்ட தொடக்க நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியது.

வடக்கு கிழக்கு சமூக நல்லிணக்கத்திற்கான அமைப்பின் ஏற்பாட்டில், யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கருகில் இந்நிகழ்வு நேற்றுக் காலை ஆரம்பமாகியது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் பல முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக, வடக்கு கிழக்கு மக்களாகிய நாங்கள், வன்முறை வாழ்வு தராது என்றும் போதையானது வாழ்வை அழிக்கும் என்றும் அறிந்திருக்கின்றோம். அந்த அறிவார்ந்த நம்பிக்கையின் மீது எமது சமூக சமய கலாசார பண்பாட்டு கட்டமைப்பையும் சந்ததியினரையும், எமது வாழ்வையும் மேம்படுத்த உறுதி பூணுகின்றோம்.

வன்முறையை, போதையை ஆதரிக்கும் எவரும் எமது மக்களின் மீதும் எமது எதிர்காலத்தின் மீதும் எவ்வித அக்கறையும் அற்றவர்கள் என்றும் எமது அழிவிற்கு துணை நிற்பவர்கள் என்றும் நம்புகின்றோம்.

அனைத்து பெற்றோரும் தாம் போதை மற்றும் வன்முறைகளிலிருந்து முற்றாக விலகியிருப்பதோடு தமது குழந்தைகள் அவ்விடயத்தில் ஈடுபாடு காட்டவில்லை என்பதை முழுமையாக உறுதிசெய்தல் அவசியமாகும். அவ்வாறு ஈடுபாடு காட்டுகின்ற பிள்ளைகளின் விடயத்தில் உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் அணுகுமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவது அவசியமாகும்.

அனைத்து மதங்களும் போதைக்கும் வன்முறைக்கும் எதிரானவை. மதத்தலைவர்களும், மதகுருமார்களும், வணக்கஸ்தலங்களும் போதைக்கும் வன்முறைகளுக்கும் எதிரான போதனைகள் வழிகாட்டல்கள், விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் கடந்த காலத்தை விட கூடுதல் முக்கியத்துவத்தோடு முன்னெடுத்தல் அவசியமாகும்.

போதைப்பொருள் பாவனையிலும், வன்முறைகளிலும் பரவலாக ஈடுபடுவோர் இளைஞர்கள் என்ற வகையில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் இளைஞர்களை போதைப் பாவனையிலிருந்தும் வன்முறைகளிலிருந்தும் மீட்டெடுப்பதற்கு அனைத்து சமூகமட்ட அமைப்புகளும் தொடராக உழைப்பதற்கு முன்வரல் வேண்டும்.

வன்முறைக்கும் போதைக்கும் எதிராக மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சிகள் என்பன தற்போது காணப்படும் சட்டரீதியான பொறிமுறைகளினூடாக தமது மன்றங்களின் விசேட சட்டமூலங்களினூடாக நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

இந்த தீர்மானங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் பெற்றோர், மதத் தலைவர்கள், சமூகத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் இணைந்து போதைக்கும் வன்முறைக்கும் எதிரான விழிப்புணர்வுக் குழுக்களை அமைத்துச் செயற்பட வேண்டுமென குறித்த நிகழ்வில் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், போதைப் பொருளும் வன்முறையும் முற்றாக ஒழியும் வரை இந்தப் பயணம் தொடருமென இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உறுதிபூண்டனர்.

இந்த விழிப்புணர்வு செயற்திட்ட நிகழ்வில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அஸ்மின் அயூப், கே.சயந்தன், சுகிர்தன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளைச் சார்ந்தவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம)

# கல்வி நிலையத்துக்கு சென்ற மாணவியின் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு கல்வி கற்க சென்ற மாணவி ஒருவரின் துவிச்சக்கரவண்டி ஒன்று திருட்டுப்போயுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.ஈச்சமோட்டையில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கும் குறித்த மாணவி கடந்த வியாழக்கிழமை சைக்கிளை பூட்டாது வகுப்பறைக்கு சென்றுள்ளார்.

பாடங்கள் அனைத்தும் நிறைவடைந்து வீட்டிற்கு திரும்புவதற்காக சைக்கிள் விடப்பட்ட இடத்திற்கு வந்து பார்த்த போது தனது சைக்கிளை காணாது திகைப்புற்றுள்ளார்.

குறித்த மாணவி நிர்வாகியிடம் மேற்குறித்த தகவலை தெரியப்படுத்தியுள்ளார். நிர்வாகி விரைந்து செயற்பட்டபோதும் சைக்கிளை திருடிச்சென்றவர்களை இனங்காண முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.(ம)

# மின்னேரிய தெய்வசிலையை திறந்து வைத்த ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

எழுச்சிபெறும் பொலநறுவை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட மின்னேரிய கோயிலில் அமைக்கப்பட்ட மின்னேரிய தெய்வத்தின் திருவுருவச் சிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இத்திருவுருவச் சிலை, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதியின்நன்கொடையிலும் ஹிங்குராங்கொட விமானப் படை தலைமையகத்தின் உத்தியோகத்தர்களது தொழிற் பங்களிப்பிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த திருவுருவச் சிலை நிர்மாணிப்பிற்கு பங்களிப்பு வழங்கிய சகல விமானப்படையினருக்கும் ஜனாதிபதி நினைவுப் பரிசில்களை வழங்கியதுடன், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி, ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன் றையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம)


**Florances nightingaale School Of Nursing**

கல்வி கற்று விட்டு கௌரவமான தொழில் ஒன்றை தேடுபவரா நீங்கள்.

அப்படியாயின் எங்களிடம் ஒரு வருடம் பயிற்சி பெற்று தனியார் வைத்தியசாலையில் தாதியாக கடமையாற்றுங்கள்.

- ஒரு வருட பயிற்சிப் பாடநெறி
- 3 மாத பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலைவாய்ப்புகள்



தகைமை
O/L 6 பாடம் சித்தி
வயது : 17-35
பெண்கள் மட்டும்

வெளிநாடு செல்வோருக்கான சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0777186438

(3976)

முகவரி:-
நெல்லியடி,
குஞ்சர் கடையடி கரணவாய் மத்தி,
நெல்லியடி.

கிளைகள்
மருதனார்மடம்,
K.K.S Road,
மருதனார்மடம்.

# ராஜபக்ஷக்களால் ஆபத்து!

## இனியும் விட்டு வைக்கக்கூடாது; பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

அடுத்த அரையாண்டு காலப்பகுதிக்குள் ராஜ பக்ஷக்களை இருக்க வேண்டிய இடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் தமது தரப்பிற்கு பாரிய ஆபத்துக்கள் ஏற்படும் என வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில்நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

மேலும், ஒரு முறையான தலைமைத்துவம் நாட்டிற்கு அமையாததன் காரணமாகவே ஐக்கிய தேசிய கட்சிக்கும், நாட்டிற்கும் தற்போது நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது எனவும் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு வேட்பாளரையே முன்னிலைப்படுத்துவோம் எனவும், வேறு ஒருவரை முன்னிறுத்தப் போவதில்லை எனவும் பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-7)



## 21 பீரங்கிக் குண்டுகள் முழங்க அணிவகுப்பு; அக்கிராசனத்தில் அமர்கிறார் ஜனாதிபதி





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த மாதம் முடக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் அமர்வு மீண்டும் நாளை ஆரம்பமாகவுள்ளது.

நாளை பிற்பகல் 2.15 மணியளவில் நாடாளுமன்றத்தின் புதிய அமர்வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைப்பார்.

புதிய நாடாளுமன்றம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படும் போது இடம்பெறுவது போன்ற சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகள் இதன் போதும் இடம்பெறும்.

ஜனாதிபதிக்கு 21 பீரங்கிக் குண்டுகள் முழங்க அணிவகுப்பு மரியாதை அளிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் பார்வையாளர் அரங்கு மூடப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட அழைப்பாளர்கள் மாத்திரம் இந்த ஆரம்ப நிகழ்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை வாசிப்பார்.

இந்த கொள்கை அறிக்கை மீது எதிர்வரும் வியாழக்கிழமை விவாதம் நடத்தப்படவுள்ளது.

இதனிடையே, நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கான அணிவகுப்பு மரியாதை தொடர்பான ஒத்திகைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. (இ-7)

## 17 வயது பௌத்த பிக்கு கஞ்சாவுடன் கைது!

### கடும் எச்சரிக்கை விடுத்த பொலிஸார்

(திருமலை)

திருகோணமலைபகுதியில் ஆட்டோவில் கஞ்சா கொண்டு சென்ற 17 வயது பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டு கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஹொரவப்பொத்தானை ஆட்டோ தரிப்பிடத்தில் முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான ஆட்டோவில் கேரள கஞ்சா கொண்டு செல்வதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்த மொறவெவ பொலிஸார் குறித்த ஆட்டோவில் 17 வயதுடைய பிக்குவிடம் இருந்து கஞ்சாவை மீட்டுள்ளதுடன், அவரை கைது செய்திருந்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் பௌத்த பிக்குவை மொறவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததுடன், பெரிய பௌத்த பிக்குவை வரவழைத்து கைது செய்யப்பட்ட பிக்குவை எச்சரித்து விடுவித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் எவ்வித உதவிகளும் செய்ய முடியாத நிலை ஏற்படும் எனவும்பொலிஸார்எச்சரிக்கை செய்து குறித்த பிக்குவை விடுவித்துள்ளனர். (இ-7)

## எரிபொருள் சூத்திரத்தால் சர்வதேச நாணய நிதியத்திற்கும் அரசிற்கும் இடையே முரண்பாடு

### கூட்டு எதிரணி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையே தற்போது முரண்பாடு உச்சகட்டத்தை எட்டியிருப்பதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு அடுத்த கடன்தொகையை விடுவிக்க வேண்டும் எனில் எரிபொருள் சூத்திரத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இதனை நிறைவேற்ற அரசாங்கம் பின்னடிப்பு செய்வதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டினார். (இ-7)

## ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் என்ற தவறை மீண்டும் செய்யமாட்டோம்

### ஐ.தே.க.அமைச்சர் கிரியெல்ல உறுதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக இதன் பிறகு பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லையெனவும், 2020 இல் ஜனாதிபதி வேட்பாளர் ஐ.தே.கவின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் எனவும் சபைத் தலைவரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும், கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தியிருந்தால் நாம் வெற்றி பெற்றிருப்போம். இந்த தவறை அடுத்த தேர்தலில் செய்யமாட்டோம்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியுள்ள தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான்.

இருப்பினும், வேறு யாராவது சவால்களை முறியடித்து ஜனாதிபதி தேர்தலை வெற்றிகொள்ள முடியும் என தன்னம்பிக்கையுடன் முன்வருவார்களாயின் அது குறித்து கருத்தில் கொள்வோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## நாடாளுமன்ற அமர்வுகளுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் புதிய அமர்வுகள் நாளை 8ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு தொடர்பிலான ஒத்திகையொன்று நடத்தப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு நாடாளுமன்றின் புதிய அமர்வுகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இறுதி ஓவரில் மும்பை வெற்றி



ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஹர்திக் பாண்ட்யா அசத்த, மும்பை அணி, 13 ஓட்டங்களால் கடைசி ஓவரில் வெற்றி பெற்றது. கொல்கத்தா அணியின் ரொபின் உத்தப்பாவின் போராட்டம் வீணானது.

இந்தியாவில், 11ஆவது ஐ.பி.எல்., சீசன் நடக்கிறது. நேற்று, மாலை மும்பையில் நடந்த 37ஆவது லீக் போட்டியில் மும்பை - கொல்கத்தா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் தலைவர் தினேஷ் கார்த்திக், முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**சூர்யகுமார் அபாரம்**

மும்பை அணிக்கு சூர்யகுமார் யாதவ், எவின் லீவிஸ் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. மிட்சல் ஜோன்சன் வீசிய 3ஆவது ஓவரில, ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்தார் சூர்யகுமார். முதல் விக்கெட்டுக்கு 91 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது ரசல் "வேகத்தில்" லீவிஸ் (43) வெளியேறினார். சூர்யகுமார், 31 பந்துகளில் அரைச்சதமடித்தார். அணித் தலைவர் ரோகித் சர்மா (11), நரைன் "சுழலில்" சிக்கினார். ரசல் பந்தில் சூர்யகுமார் (59) ஆட்டமிழந்தார். சாவ்லா பந்தில் ஒரு சிக்சர் அடித்த ஹர்திக் பாண்ட்யா, பிரசித் கிருஷ்ணா வீசிய 16ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விளாசினார். குர்னால் பாண்ட்யா (14) நிலைக்கவில்லை.

20 ஓவர்களில் மும்பை 4 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது. ஹர்திக் (35), டுமினி (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பில் ரசல், நரைன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**உத்தப்பா விளாசல்**

சவாலான இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு கிறிஸ் லின் (17) - சுப்மன் கில் (7) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. பின், ரொபின் உத்தப்பா, நிதிஷ் ராணா ஜோடி இணைந்து போராடியது. குர்னால் பாண்ட்யா வீசிய 7ஆவது ஓவரில், ஒரு சிக்சர். விளாசிய உத்தப்பா, மார்க்கண்டே வீசிய 8ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 சிக்சர் பறக்கவிட்டார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ராணா, மெக்லீனகன் பந்தில் ஒரு சிக்சர் அடித்தார். பென் கட்டிங் வீசிய 12 ஆவது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி விளாசிய உத்தப்பா, 32 பந்துகளில் அரைசதமடித்தார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக 84 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது மார்க்கண்டே பந்தில் உத்தப்பா (54) ஆட்டமிழந்தார். ஹர்திக் பாண்ட்யா "வேகத்தில்" ராணா (31) வெளியேறினார். ரசல் (9) ஏமாற்றினார். பும்ரா வீசிய 19ஆவது ஓவரில் அணித் தலைவர் தினேஷ் கார்த்திக், ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடிக்க, கடைசி ஓவரில் வெற்றிக்கு 23 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

குர்னால் பாண்ட்யா வீசிய 20ஆவது ஓவரின் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சுனில் நரைன் (5), 2ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்த 4 பந்துகளில், 5 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது.

இறுதியில் கொல்கத்தா அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்கள் எடுத்து 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கார்த்திக் (36), சாவ்லா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். மும்பை அணி சார்பில் ஹர்திக் பாண்ட்யா, 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**4000**

கொல்கத்தா அணியின் ரொபின் உத்தப்பா, 17 ஆவது ஓட்டத்தை எட்டியபோது, ஐ.பி.எல்., அரங்கில் 4,000 ஓட்டங்கள் எடுத்த 6ஆவது வீரரானார்.

இதுவரை இவர், 159 போட்டிகளில், 23 அரைச்சதம் உட்பட, 4,037 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஏற்கெனவே ரெய்னா (4,801 ஓட்.,), ஹோலி (4, 775), ரோகித் சர்மா (4,4 38), காம்பிர் (4,217), வோர்னர் (4,014) இம் மைல் கல்லை எட்டி இருந்தனர்.




**vivo IPL**

## இந்தியன் பிறிமியர் லீக் - 2018
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 9 | 7 | 2 | 14 |
| 2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 10 | 7 | 3 | 14 |
| 3 | கிங்ஸ் XI பஞ்சாப் | 9 | 6 | 3 | 12 |
| 4 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 10 | 5 | 5 | 10 |
| 5 | மும்பை இந்தியன்ஸ் | 10 | 4 | 6 | 8 |
| 6 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 9 | 3 | 6 | 6 |
| 7 | டில்லி டேர்டெவில்ஸ் | 10 | 3 | 7 | 6 |
| 8 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 9 | 3 | 6 | 6 |

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 23.04.2018 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**தவில் வித்துவான், தவில் அரசு, இசைமணி**

**வட்டூர் அமரர்**

## நடராசா இராமநாதன்



தோற்றம் 23.04.1956

மறைவு 23.04.2018

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிரியைகள் நாளை (08.05.2018) செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"மணிகண்ட வாசம்"
கந்தசாமி கோவிலடி,
மாவடி,
வட்டுக்கோட்டை. (3877)

இங்ஙனம்:
குடும்பத்தினர்
தொ.பே: 077 491 4179
077 935 3185, 077 757 9326

# விழி நீர் அஞ்சலி



அமரர்
**கனகலிங்கம் சரோஜினிதேவி**

எமது சக நண்பன் க.உமாகாந் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி.கனகலிங்கம் சரோஜினிதேவி அவர்கள்
06.04.2018 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு
அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்ட மருத்துவ பிரதிநிதிகள் மற்றும்
மருத்துவ விற்பனை பிரதிநிதி நண்பர்கள்
(Jaffna Medical Delegates Association)


## வேலையாட்கள் தேவை

நெல்லியடி நகரப் பகுதியில் அமைந்துள்ள மாறியோ கிறீம் கவுஸிற்கு ஐஸ்கிறீம் தயாரிப்பில் அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை. (ஆண்/பெண்)

தொடர்பு கொள்ள வேண்டிய

தொலைபேசி இலக்கம்: 076 8373190

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு:
**021 221 7603,**
**021 567 1532**


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர். கந்தசாமி இரத்தினசோதி



(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

**தோற்றம்: 29.02.1936 | மறைவு: 07.04.2018**

கடந்த 07.04.2018 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் அமரர். கந்தசாமி இரத்தினசோதி அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.05.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இல, 527, நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை மண்டபத்தில் (TCT Hall) நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்களையும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

595/12, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**
கலாநிதி.இ.ஸ்ரீகரன்(மகன்),
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

(3813

## இராசி பலன்

**07.05.2018**
சித்திரை 24, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சப்தமி பிற்பகல் 4.51 மணிவரை
திருவோணம் முழுவதும்
சுபநேரம் 11.55-1.25 மணிவரை
இராகுகாலம் 7.25-8.55 மணிவரை
நடேசர் அபிஷேகம்

| | | | |
|---|---|---|---|
| | சூரி புத | சுக் | |
| | கிரகநிலை | | ராகு |
| செவ் கேது சந் | சந்திராஷ்டமம் புனர்பூசம் | | |
| சனி | | குரு | |

**மீனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**மேடம்:** பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**இடபம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவிவந்த கசப்பு ணர்வுகள் மாறும், செய்தொழிலில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** நெருங்கிய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**மகரம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.

**சிம்மம்:** சுப காரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் நலன்கருதிய முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பகைவர்கள் விலகுவர், கௌரவமான நாள்.

**தனுசு:** செய்தொழிலில் உயர்வும் மேன்மையும் கிடைக்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், நாவன்மையால் நல்லபெயர் கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வளர்ச்சி கூடும் நாள், தொழில் முன்னேற்றகரமாக அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்:** செல்லும் இடங்களில் கீர்த்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், தள்ளிப் போட்டுவந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

வளவன்



தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) தலைவர் அமரர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 32 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுக்காலை கோண்டாவில் அன்னுங்கை பகுதியில் ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்:-பொ.சோபிகா)

# வேலணை பிரதேச கடற்றொழிலாளர்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

## தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி உறுதி

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அனைத்துதேவைப்பாடுகளையும் மேற்கொண்டு வேலணைப் பிரதேச கடற்றொழிலாளர்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வேலணைப் பிரதேச சபைத் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் குறித்த பிரதேச நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண்பதற்காக குறித்த பிரதேச கடற்றொழிலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பங்கினை வகிக்கும் தொழிலாக கடற்றொழில் முதன்மை பெறுகின்றது.

இந்தத் தொழிலை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டியது அவசியமானது.

அந்த வகையில் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கடல் அட்டை வளர்ப்பு திட்டத்தை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான கோரிக்கையினை குறித்த பிரதிநிதிகள் முன்வைத்திருந்தனர்.

குறித்த கோரிக்கையின் பிரகாரம் கடலட்டை வளர்ப்பதற்கான திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்புகளையும் அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக தெரிவித்தார். (இ-7)

## குரு பாதுகா பூஜை, சத்சங்கம்

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் 102 ஆவது ஜெயந்தியை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷனில் நாளை 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணி வரை, குரு பாதுகா பூஜை, பஜனை, சத்சங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அடியார்கள் தனித்தனி யாக குருதேவரின் படம் வைத்துப் பூஜை செய்யும் வாய்ப்பு உண்டு.

ஆர்வமுள்ள அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். (இ-7)

## வீதி புனரமைப்பு ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக திருத்தப்படாது காணப்பட்ட மந்துவில்வடக்கு குடியிருப்பு வீதியை திருத்துவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏழு மில்லியன் ரூபா செலவில் இவ்வீதி திருத்தப்படவுள்ளது.

நீண்டகாலமாக மக்கள் முன்வைத்து வந்த கோரிக்கைகக்கு அமைய இவ் வீதித் திருத்தப் பணிகளை பிரதேச சபை உறுப்பினர் சி.இரத்தினசிங்கம் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். (இ-7)



யாழ்ப்பாணம் மகேந்திரபுரத்தில் நேற்று கிராம அபிவிருத்தி சங்கத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கலைநிகழ்வுகள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்களின் போது... (படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

## யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் உயர்தர தொழில் பாடத்துறை அமுலாக்கம்

(யாழ்ப்பாணம்)

கலாசாலை வீதி-திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் பாடசாலையில் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் உயர்தர தொழில்பாடத்துறை அமுலாக்கம் (G.C.E.A/L VOCATIONAL STREAM) திட்டம் எதிர்வரும் 10.05.2018 முதல் ஆரம்பமாகவுள்ளது.

இப் பாடசாலைக்கு அண்மையில் உள்ள அயற் பாடசாலைகளில் கல்வி கற்று-2016, 2017 ஆம் ஆண்டுகளில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி- உயர்தரத்துக்குத்தகுதிபெறாத அனைத்து மாணவர்களும் இணைந்து இக் கல்வியைத் தொடர முடியும். அனுமதி வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதனால் கற்க விரும்பும் மாணவர்கள் உடன்பதிவுகளை மேற்கொண்டு கற்கையைத் தொடரலாம் என யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் இ.பசுபதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ-7)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை இந்து இளைஞர் சபையின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும். (இ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பகிரங்க சேவை அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்.மாவட்ட பொதுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் பொ.கமலநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் என். வேதநாயகன். சிறப்பு விருந்தினராக இலங்கை பகிரங்க சேவை அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தாய்ச்சங்க உபதலைவர் ஆர்.எம்.வீ.ஜே. ரணதுங்க ஆகியோர் கலந்து கொள்வர். இதில் யாழ்.சணச அபிவிருத்திவங்கி முகாமையாளர் எஸ்.சபேசன் ஓய்வூதியர்களும் நிதி உதவிகளும் பற்றி உரை நிகழ்த்துவார். (இ)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07. 54 | 01. | 1 | 11. | 4 | 21. | 4 |
| 08. 8743 +3478 =12221 | 02. | 2 | 12. | 3 | 22. | 2 |
| 09.520 | 03. | 3 | 13. | 4 | 23. | 3 |
| 10. 1) 1/8 2)7/8 | 04. | 3 | 14. | 4 | 24. | 2 |
| 11. 1500 - 350= 1150 ml | 05. | 1 | 15. | 1 | 25. | 3 |
| 12. 235 + 95 = 330 cm | 06. | 1 | 16. | 1 | 26. | 2 |
| 13. 162 | 07. | 4 | 17. | 3 | 27. | 3 |
| 14. 45.00, 120.00, | 08. | 3 | 18. | 4 | 28. | 3 |
| 220.00 | 09. | 2 | 19. | 3 | 29. | 1 |
| 15. 295.00 | 10. | 2 | 20. | 1 | 30. | 3 |



புலோலி தமிழ் இளைஞர் கழகம், புற்றளை சனசமூக நிலையம், புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம் இணைந்து அகில இலங்கை ரீதியில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிறிதரன் துவாரகனைப் பாராட்டி கௌரவிக்கும் விழா அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி முல்லை பரமேஸ்வரன் கலந்து கொண்டார்.

# எண்ணெய்க் கப்பலில் ஆஸி நோக்கிப் பயணித்த 130 இலங்கையர்கள் மலேசியாவில் கைது

(கோலாலம்பூர்)

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நோக்கிப் பயணம் செய்த எண்ணெய்க் கப்பல் ஒன்றில் இருந்து 130 இலங்கையர்கள் மலேசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மலேசியாவின், ஜோகோர் மாகாணத்தின், Tanjung Gemuk துறைமுகத்துக்கு அப்பால் உள்ள கடலில் பயணித்த Etra என்ற எண்ணெய் தாங்கி கப்பலில் இருந்தே, 130 இலங்கையர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.






கடந்த மே முதலாம் திகதி காலை இவர்கள் கைது செய்யப்பட்ட போதிலும், இது பற்றிய தகவல்களை மலேசிய பொலிஸார் நேற்று முன்தினம் மாலையே வெளியிட்டனர். இந்தக் கப்பலில் இருந்த அனைவரும் இலங்கையர்களாவர்.

அவர்களில் 98 ஆண்களும், 24 பெண்களும், 5 சிறுமிகள் உள்ளிட்ட 9 சிறுவர்களும் அடங்கியுள்ளனர்.

இவர்களை கப்பலில் ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. அதில், இருந்த மூன்று இந்தோனேசியர்களும், நான்கு மலேசியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கான ஒழுங்குகளைச் செய்த மேலும் 5 மலேசியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# போதைக்கும் வன்முறைக்கும் இஸ்லாம் இடமளிப்பதில்லை

## அஸ்மின் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போதைக்கும் வன்முறைக்கும் இஸ்லாம் இடமளிப்பதில்லை என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின் தெரிவித்தார். "போதை ஒழிப்போம்; வன்முறை தவிர்ப்போம்" என்ற தொனிப் பொருளில் வடகிழக்கு நல் லிணக்கத்திற்கான அமைப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணத்தில் இப்போது உருவாகியிருக்கின்ற போதைப்பொருள் பாவனை மற்றும் வன்முறைக் கலாசாரம் இந்த மண்ணுக்கே உரித்தான விடயங்கள் அல்ல. அது செயற்கையாக இங்கே திணிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் எமது மக்களின் வாழ்வியல் ஒழுங்கை சிதைக்கின்ற வகையில் இவை அந்நிய ரால் திட்டமிட்டு இங்கே உட்புகுத்தப்பட்டிருக்கின்றது.

சிங்கள அரசியல்வாதிகள், இராணுவம், பொலிஸார் எனப் பலரும் இதனோடு தொடர்புபடுகின்றார்கள். ஒரு சில முஸ்லிம்களும் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவது மனவேதனையளிக்கின்றது.

எந்த மதமும் போதைப் பொருள் பாவனையினை, வன்முறை கலாசாரத்தை அனுமதிப்பதில்லை. அதிலும் விஷேடமாக இஸ்லாத்தில் போதைக்கும் வன்முறைக்கும் ஒரு அணுவளவேனும் இடமில்லை.

யாழ்ப்பாண முஸ்லிம் மக்களாகிய நாங்கள் போதைக்கு எதிரானவர்கள், வடக்குக் கிழக்குத் தழுவிய ரீதியில் போதைக்கு எதிராக இந்த அமைப்பு முன்னெடுக்கவிருக்கின்ற செயற்பாடுகளுக்கு நாம் முழுமையாகத் துணை நிற்போம். உங்கள் பயணத்தில் முஸ்லிம்களும் இணைந்திருப்பார்கள் என்று தெரிவித்தார். (இ-7)

### பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து

# கடலட்டை பிடித்த ஒன்பது பேர் கடற்படையால் நேற்றுக்கைது

(கரணவாய்)

பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடலட்டை பிடித்த ஒன்பது பேரை கைது செய்து பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பருத்தித்துறை கடற்பகுதியில் மூன்று படகுகளில் கடலட்டை பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியின்றி இந்நடவடிக்கையில் ஈடுபட்ட அவர்களிடம் 500 வரையான கடலட்டைகளும் ஒன்பது சங்குகளும் இருந்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தாளையடி, செம்பியன்பற்று, மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களை நேற்றுக் காலை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (இ-60)

# இராணுவத்தின் வாகன உதவியுடன் கரவெட்டியில் கழிவுகள் அகற்றல்

## பிரதேச சபை தவிசாளர் நடவடிக்கை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபை தவிசாளரின் முயற்சியின் பயனாக கரணவாய் மண்டான் பகுதியில் கொட்டப்பட்டு வந்த கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. மேற்படி பகுதியில் கொட்டப்பட்டுவரும் கழிவுகளால் பொதுமக்கள் வீதியால் பயணிக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது.




இது தொடர்பில் பல முறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டும் எவ்வித முடிவுகளும் எட்டப்படவில்லை.

கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் த.ஐங்கரன் இராணுவத்தின் உதவியுடன் கழிவுகள் அகற்றுவதற்காக பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பித்தார்.

அது ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து இராணுவத்தினர் கனரக வாகனத்தின் உதவியுடன் கழிவுகளை அகற்றி முடித்தனர்.

தற்போது கழிவுகள் கொட்டப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட இடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் கழிவுகள் கொட்டுவோர் இனங்காணப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச சபையினர் தெரிவித்தனர். (இ-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:பூராடம்
கி.பா: 73 சூரி செவ் 6 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:MBBS MD
வைத்தியர் அமெரிக்கா PR
தொ.இ:B/8529

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 3ம்பாதம்
கி.பா: 24 செவ் 7 இல்
உயரம்:6'
தகைமை/தொழில்:O/L சுவிஸ்
NOT PR
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.வெளிநாடு மட்டும்
தொ.இ:B/8530

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 2ம் பாதம்
கி.பா: சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:B/8531

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:திருவோணம் 3ம் பாதம்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:பட்டதாரி
வங்கியாளர்
தொ.இ:B/8534

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3ம் பாதம்
கி.பா: 14
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSC HSN PHD IN MEDICINE RS வைத்தியர்
அவுஸ்திரேலியா PR
தொ.இ:G/8547

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4ம்பாதம்
கி.பா: 37
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BBA கனடா PR
வங்கியாளர்
தொ.இ:G/8548

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4ம் பாதம்
கி.பா: 33 செவ் 1 இல்
உயரம். 140cm
தகைமை /தொழில்: B.COM
கனடா PR
தொ.இ:G/8549

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2ம் பாதம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: DIPLOMA
ஆங்கில ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/8552

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆயிரத்து 88 குடும்பங்களுக்கு வரட்சிக்கால உலருணவு

## கரைச்சி பிரதேச செயலர் முகுந்தன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் ஆயிரத்து 88 குடும்பங்களுக்கான வரட்சிக்கால உலர் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஆயிரத்து 278 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் வரட்சி நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அனர்த்த முகாமைத்துவத்தின் வரட்சியினால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 88 விவசாயக் குடும்பங்களுக்கான வரட்சி நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது ஆயிரத்து 278 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதாவது, அக்கராயன் குளம் பிரதேசத்தில் 465 குடும்பங்களுக்கும் பொன்னகர் பகுதியில் 142 குடும்பங்களுக்கும் பாரதிபுரம் பகுதியில் 130 குடும்பங்களுக்கும் மலையாளபுரம் பகுதியில் 45 குடும்பங்களுக்கும் விவேகானந்தநகர் பகுதியில் 10 குடும்பங்களுக்கும் கிருஸ்ணபுரம் பகுதியில் 234 குடும்பங்களுக்கும் உதயநகர் கிழக்குப்பகுதியில் 05 குடும்பங்களுக்கும் அம்பாள்நகர் பகுதியில் 220 குடும்பங்களுக்கும் இவ்வாறு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (2-315)

# 69 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்பு

## வவுனியா பொலிஸார் அதிகாலை வேளை அதிரடி

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் 69 கிலோ கேரள கஞ்சாப் பொதிகள் நேற்று அதிகாலை மீட்கப்பட்டன.



வவுனியா ஓமந்தை பகுதியில் வியாபார நடவடிக்கையை மேற்கொள்வதற்காக எடுத்த வரப்பட்ட பெருமளவு கேரள கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளதாகவும் சந்தேக நபர்கள் மூவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஓமந்தை பன்றிக்கெய்த குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் கஞ்சா வியாபார நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக பெருமளவு கஞ்சாப் பொதிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று அதிகாலை வேளை கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழி நடத்தலில் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோனின் உதவியுடன் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்லுவராச்சி கீழ் வன்னி மாவட்ட புலனாய்வுத்துறை பொறுப்பதிகாரிகளின் தகவலின் அடிப்படையில் விரைந்த குழுவினர் வன்னி மாவட்ட போதை ஒழிப்பு பொலிஸ் பரிசோதகர் அடங்கிய குழுவினர் இந் நடவடிக்கையினால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 69கிலோ 725கிராம் கேரளக் கஞ் சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

அவ்வீட்டிலிருந்த வவுனியா திருநாவற்குளம் பகுதியைச் சேர்ந்த சி. துசாந்தன் (வய்து 23) என்பவரும், மல்லாவியை சேர்த்த க.சபேசன் (வயது 23) , யாழ். தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த ஆர். ரஜீபன் (வயது 28) வயது ஆகிய மூவரைக் கைது செய்துள்ளதாகவும் விசாரணைகளின் பின்னர் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாப் பொதிகளை நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளதாக சந்தேக நபர்களை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-281-250)




# மக்களுக்கான விடுதலை நோக்கியே எமது நீதி வழிப்பயணம் தொடரும்

## மாவை எம்.பி.தெரிவிப்பு

(கண்டாவளை)

இரணைதீவில் சாத்வீக வழியில் தமது பூர்வீக நிலங்களுக்காக போராடி வரும் மக்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று கலந்துரையாடியுள்ளதுடன் மக்களுக்குத்தேவையான உலருணவுப் பொருட்களையும் வழங்கி வைத்தனர்.

இம் மக்களை பல்வேறு தரப்புக்களும் சந்தித்து தமது ஆதரவுகளை வழங்கி வருகின்றனர்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறிதரன்,சாள்ஸ் நிர்மலநாதன், மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா ஆகியோர் இரணைதீவுக்கு நேற்று முன்தினம் சென்று மக்களை சந்தித்துக் கலந்துரையாடியதுடன், அவர்களது போராட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவுகளை தெரிவித்தனர். மக்களுக்கு தேவையான உலருணவுப்பொருட்கள் மற்றும் சத்துணவுப் பொருட்களையும் பெற்றோ நியுஸ் நிறுவனம் மற்றும் சிவனருள்நிறுவனம் ஆகியன இணைந்து வழங்கியுள்ளன.

இவ்விஜயத்தின் போது, பூநகரி, கரைச்சி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு உரையாற்றிய மாவை.எம்.பி,

இரணைதீவு மக்களின் வாழ்வியல் உரிமைகளை மீட்டெடுக்கும் வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் தொடர்ந்து செயற்படுவோம்.

அங்கு இவர்களது வாழ்விடங்கள் சிதைவடைந்த நிலையிலும் பற்றைக் காடு பற்றியும் காணப்படுகின்றமையால் அங்குள்ள தேவாலயத்திலும் தேவாலயத்திற்கு அருகிலும் தங்கியுள்ளார்



கள். அவர்களுக்கு அங்கு போதிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இரணைதீவு உள்ளிட்ட தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறி எமது மக்களின் நிலத்தில் எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். எமது மக்களின் நிலங்கள் அவர்களிடமே வழங்கப்பட வேண்டும் என நாம் பாராளுமன்றத்திலும் சர்வதேச அரங்கிலும் தொடர்ந்தும் குரல்கொடுத்து வருகின்றோம். அத்துடன் இராணுவத்தின் பிடியிலுள்ள அந்த் நிலங்களும் எமது மக்களிடம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் தொடர்ந்தும் போராடி வருகின்றோம்.

எனவே எமது மக்களது பூர்வீக வாழ்விடங்கள் எமது மக்களிடம் கையளிக்கப்பட்டு எமது மக்களும் சகல உரிமைகளையும் பெற்று நிம்மதியாக வாழும் வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஓய்போவதில்லை. எமது மக்களுக்கான விடுதலை நோக்கியே எமது நீதி வழிப் பயணம் தொடரும் என்றார். (2-315)

# பொருளாதார மத்திய நிலைய கடைகளை வவு.வியாபாரிகளுக்கு வழங்க வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் கடைகளை ஏற்கனவே வவுனியாவில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டுமென வடக்கு மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கடந்த முறை நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதில் வவுனியா மதகுவைத்தகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பொருளாதார மத்திய நிலையத்தில் 50 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை திறந்த கேள்விகோரல்மூலம் வழங்குவதற்கு கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அறிய கிடைக்கின்றது. கடந்த 40 வருடங்களாக வவுனியா நகரில் 35 கடைகளில் உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் விற்பனையாளர்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். திறந்த கேள்விகோரல் மேற்கொள்ளப்பட்டால் வவுனியா வியாபாரிகள் தென்பகுதி வியாபாரிகளுடன் போட்டிபோட முடியாத நிலைமை ஏற்படலாம். இதனால் மாவட்டத்தைச் சேர்ந்த வியாபாரிகளுக்கு கடைகள் கிடைக்காமல் போக வாய்ப்பு ஏற்படலாம். எனவே நீண்டகாலமாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடைகளை வழங்க வேண்டும் மிகுதியாக வுள்ள 15 கடைகளையும் திறந்த கேள்விகோரல்மூலம் ஏனையவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இவரது கோரிக்கையானது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபரினால் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு கடிதமூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(2-281)

# தேவன் பிட்டி, அந்தோனியார்புர கிராமங்களில் பாதுகாப்பற்ற முறையில் கடற்றொழிலில் பெண்கள்

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேவன் பிட்டி அந்தோனியார்புரம் ஆகிய கிராமங்களில் உள்ள அதிகளவான பெண்கள், இடர்களுக்கு மத்தியில் கடற்றொழிலை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற சுமார் 60இற்கு மேற்பட்ட பெண்கள் உள்ளடங்கலாக இவ்வாறு கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பெண்கள் அட்டை, நண்டு, இறால் போன்ற கடல் உணவுகளைப் பிடித்து விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

குறித்த கடல் பிரதேசத்தில் பல்வேறு ஆபத்துக்கள் உள்ள போதும் குறித்த பெண்கள் குழுக்களாகவே அட்டை, நண்டு, இறால் போன்றவற்றை கையினால் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடலில் ஆட்டி, கவாட்டி எனப் பலவிதமான ஆபத்தான பொருட்கள் காணப்படுவதாகவும் அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடலில் கூடுகளை வைத்து மீன் பிடியை மேற்கொள்வதினால் இறால், நண்டு போன்றவற்றின் இனம் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக குறித்த பெண்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஆண்கள் கடந்த 3 வருடங்களாக கூடு வைத்து மீன் பிடிக்கின்றனர்.

இதனால் குஞ்சு இனங்கள் வெகுவாக அழிவடைந்து வருகின்றது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரச்சினை தொடர்பில் சகல தரப்பினரிடமும் முறையிட்டும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. இதனால் காலப்போக்கில் அட்டை, நண்டு, இறால் போன்றவற்றின் உற்பத்தி அழிவடையும் நிலை ஏற்படும் என கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆயிரத்து500 ரூபாய் செலுத்தி அனுமதி அட்டையைப் பெற்று கடற்படையினரிடம் காண்பித்து கடலில் இறங்குவதாகவும் அப்பெண்கள் தெரிவித்தனர்.

எனினும் குறித்த பெண்கள் கடலில் பாதுகாப்பற்ற முறையில் மீன்பிடியில் ஈடுபடுவதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு பாதுகாப்பு அங்கிகளை வழங்கி வைக்கும் வகையில் அதிகம் தேவை உள்ள 30 பெண்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பாதுகாப்பான முறையில் அட்டை பிடிப்பதற்கான ஆடைகள் மன்னார் சமூக மேம்பாட்டு நிறுவனத்தினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4-281)

## முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை புதுக்குடியிருப்பு சந்தியில் அனுஷ்டிக்க புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தினர் ஏற்பாடு

(பனிக்கன்குளம்)

எதிர்வரும் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை புதுக்குடியிருப்பு வணிகர்கள் காலை நிகழ் வாக 9 மணிக்கு புதுக் குடியிருப்பு சந்திப்பகுதியில் நினைவுகூர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் வணிகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு வணிகர் சங்க தலைவர் செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந், பிரதேச சபை உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு வணிகர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளதுடன் வணிகர் சங்கத்தினால் தீர்மானங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதில் குறிப்பாக புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் படையினரின் முகாம் அமைந்துள்ள பகுதியில்தான் பொது மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என வணிகர்களால் ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் உள்ள நான்கு பக்கவீதிகளிலும் மின்விளக்கு பொருத்தப்பட வேண்டும். பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் சில எரியாமல் காணப்படுவதாகவும் பிரதேச சபையிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை புதுக்குடியிருப்பு வணிகர்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரிகளின் நடவடிக்கையை முற்றாக தடைசெய்ய பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நகர்ப்பகுதியில் தற்போது கழிவகற்றல் நடவடிக்கைக்காக தகரத்திலான பரல்கள் வைக்கப்பட்டுள்ளன. ஏனைய நகரங்களை போன்று பிளாஸ்ரிக் கூடைகள் வைக்கப்பட வேண்டும்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல்பொருட்கள் விற்பனை செய்யும் வணிக நிலையங்கள் சில மருந்துப் பொருட்களையும் விற்பனை செய்கின்றன. மருந்துப் பொருட்களை உரிய முறையில் மருந்தகங்களிலே விற்பனை செய்யவேண்டும். மருந்தகங்களின் தகரங்கள் பரிசீலனை செய்யவேண்டும்.

நகர்ப்பகுதியில் இன்றும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றையும் பிரதேச சபை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் வணிகர் சங்க பொதுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை புதுக்குடியிருப்பு வணிகர்கள் காலை நிகழ் வாக 9 மணிக்கு புதுக் குடியிருப்பு சந்திப்பகுதியில் நினைவுகூர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் வணிகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (2-281)




# பூர்வீக நிலத்தில் நிம்மதியாக வாழவும் தொழில் செய்யவும் அரசு அனுமதிக்க வேண்டும்

## இரணைதீவு மக்கள் மத்தியில் சிறிதரன் எம்.பி

(கண்டாவளை)

**இரணைதீவு மக்கள் பூர்வீக நிலத்தில் நிம்மதியாக வாழவும் அவர்கள் தமது வாழ்வாதாரத் தொழில்களை செய்யவும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**



இரணைதீவு பகுதியில் சாத்வீக வழியில் தமது பூர்வீக நிலங்களுக்காக போராடி வரும் மக்களை நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று கலந்துரையாடியுள்ளதுடன் அம் மக்களுக்குத் தேவையான உலர் உணவுப்பொருட்களையும் வழங்கி வைத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சிறிதரன் எம்.பி 2013ம், 2014ம் ஆண்டுகளில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கிளிநொச்சி இரணைதீவில் அந்த மக்கள் சென்று வாழ்வதற்கும் தொழில் செய்வதற்கும் அனுமதிக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை நாங்கள் தான் முதன் முதலில் இயற்றியிருந்தோம்.

நீங்கள் உங்கள் நிலத்தில் வாழும் உரிமையையும் தொழில் செய்யும் உரிமையையும் வழங்கவேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் நாங்கள் இன்று இங்கு தங்கியுள்ள மக்களுக்கு தேவையான உடனடி அடிப்படை வசதிகளைப் பெற்று தருவதற்கு முழுமுயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதேவேளை கடந்த முதலாம் திகதி ஜனாதிபதிக்கும் கடிதம்ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளேன்.

அத்துடன், தற்போது அமைச்சர் டி.எம் சுவாமிநாதனுடன் இது தொடர்பில் பேசியுள்ளேன். எமது மக்களின் பூர்வீக நிலத்தில் நிம்மதியாக வாழவும் தொழில்களை செய்யவும் அரசாங்கம் அனுமதிக்கவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இரணைதீவில் குடியேறியுள்ள மக்கள் தமக்கான குடிநீர் வசதி மற்றும் தற்காலிக கொட்டகை வசதி என்பவற்றை கோரியுள்ள நிலையில் அவற்றை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## குருந்தூர் மலையில் புதையல் தேடல்; தொல்லியல் சின்னங்கள் சிதைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலைப்பகுதியில் அடிக்கடி புதையல் தோண்டுகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் இங்கு காணப்படுகின்ற தொல்லியல் சின்னாங்கள் சிதைக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்லியல் வரலாற்றுச்சின்னமாகக் காணப்படுகின்ற குருந்தூர் மலைப் பகுதியில் பல்வேறு தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றன.

இம்மலை உச்சியில் இருக்கின்ற ஐயனார் ஆலயத்திற்கு சென்று மக்கள் வழிபாடுகளை செய்வதற்கு சில கட்டுப்பாடுகள் உள்ள இந்தப்பகுதியில் புதையல் தோண்டுகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இதேவேளை இங்குள்ள பல தொல்லியல் கற்பொழிவுகளும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே இவ்வாறான தொல்லியல் சின்னங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## தொழில் செய்யும் சூழல் நிரந்தரமாக அமையவேண்டும்

## இரணைதீவு மக்கள் விருப்பம்



(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவில் தங்கி தொழில் செய்யக்கூடிய சூழல் இருப்பதாகவும் இது நிரந்தரமாகவே அமைய வேண்டும் என இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைதீவை விடுவிக்கக்கோரி கடந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி முதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கடந்த மாதம் 23ம் திகதி முதல் இரணைதீவுக்குச்சென்று தங்கி நின்று சாத்வீக போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

26 வருடங்களில் பின்னர் எமது நிலத்தில் வாழக் கிடைத்தமை எமக்குமிகவும் சந்தோசத்தை தருகின்றது.

இங்கு வந்து எமது தொழில்களை செய்வதன் மூலம் செலவுகளும் குறைவாகவுள்ளன. தற்போது உணவு வசதிகள் ஓரளவு கிடைக்கின்றன.

மலசலகூட வசதி மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தேவையாகவுள்ளன என்றும் அவற்றை பெற்றுத்தர பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

தமது பூர்வீக நிலத்தில் குடியேறியுள்ள மக்கள் கடற்கரையோரங்களில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## கேப்பாப்பிலவு தேக்கமர வனப்பகுதியில் 3ஆவது தடவையாகத் தீ!



(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு படைமுகாம் வாயிலை அண்மித்த பகுதியில் உள்ள தேக்கங்காட்டு வனப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது தடவையாக இந்தத் தீ பரவியுள்ளது. கடும் வெயில் காரணமாக காட்டுக்கு அருகில் மூண்ட நெருப்பு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம்.

இதனால் தேக்க மரஞ் சோலைகளில் கீழுள்ள காய்ந்த இலைகள் மற்றும் பற்றைகள் தீயினால் எரிந்து சாம்பலாகியுள்ளன. அருகில் உள்ள படைமுகாம்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு படையினர் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

தீவிபத்தினால் 25 ஏக்கர் வரையான தேக்கங்காடுகள் எரிந்துள்ளன. அந்த பகுதியில் நிலைகொண்டுள்ள 59 ஆவது படைப்பிரிவினர் தண்ணீர் பாய்ச்சி தீயினை பரவ விடாமல் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள்.

நிலவும் கடும் வெப்பமான காலநிலையில் மக்கள் குப்பைகளுக்கு நெருப்பு மூட்டும் போது அவதானமாக செயற்படுமாறும் இராணுவத் தினர் கோரியுள்ளனர். இதே வேளை குறித்த தீயினால்கேப்பாப்பிலவு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## உழவு இயந்திரப்பெட்டி தடம்புரள்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான கழிவுப் பொருட்களை அகற்றும் உழவு இயந்திரம் ஒன்று நேற்று முற்பகல் 11 மணியளவில் ஏ-9 வீதி கரைச்சிப் பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள பிள்ளையார்கோவில் அருகில் கழிவுப் பொருட்களுடன் பெட்டி தடம்புரண்டது.

இது தொடர்பில் உழவு இயந்திரத்தின் சாரதியிடம் வினவிய போது,

வீதிக்கு குறுக்காக மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாகப் பயணித்த வேளை உழவு இயந்திரத்தை திருப்ப முற்பட்ட போது பெட்டி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது கரைச்சிப் பிரதேச சபை சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினார். (2-271)

## விபுலாநந்தாக் கல்லூரி; குளவிக்கூடுகள் கலைப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரியில் பல மாதங்களாக ஆபத்தான முறையில் காணப்பட்ட குளவிக்கூடுகளை பாடசாலை நிர்வாகத்தினர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பண்டாரிக்குளம் சிவில் பாதுகாப்பு குழு ஆகியோர் இணைந்து பண்டாரிக்குளம் கிராம சேவகர் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் இரவு 7 மணி தொடக்கம் 11 மணி வரையிலான சுமார் 4 மணி நேர பலத்த போராட்டத்தின் மத்தியில் பாடசாலை வளாகத்திலிருந்து அகற்றப்பட்டது.

நீர்த்தாங்கி, அரச ஊழியர் விடுதி போன்ற வவுனியாவில் பல இடங்களில் ஆபத்தான முறையில் குளவிக்கூடுகள் காணப்படுகின்றன. ஆபத்திலிருந்து தடுக்க அதிகாரிகள் முன்வருவார்களா? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (2-281)

# புகுமுக மாணவர்களுக்கு இலவசம் பல்கலைக்கழக கட்டமைப்பில் போதைப்பொருள் வர்த்தகம்

## ஜனாதிபதி மைத்திரி வருத்தம்

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்பில் போதைப் பொருள் வர்த்தகம் தாக்கம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்று சிகரெட் கொள்வனவு குறைவடைந்துள்ளதுடன், மதுபானங்கள் கொள்வனவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

எமது பல்கலைக்கழக சமூகத்தில் அதிகளவில் போதைப் பொருள் பயன்பாடு காணப்படுகின்றமை வருத்தம் அளிக்கும் விடயமாக உள்ளது.

எமக்கு கிடைத்த புதிய தகவலின் படி, பல்கலைக் கழக வளாகத்திற்குள் பல்கலைக்கழக மாணவர்களைப் போல் உடையணிந்து, மாணவர்களுக்கு போதைப்பொருட்களை விநியோகிப்பதாக அறியமுடிகிறது.



புதிய மாணவர்களுக்கு இவை இலவசமாகவும் விநியோகிக்கப்படுகின்றன.

நகரங்களில் மாத்திரம் அன்றி கிராமங்களிலும் இன்று போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், அனைவரும் இணைந்தால் இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## உள்ளக அரங்கில் மே தினம் நடத்தும் வங்குரோத்து நிலையில் ஐ.தே.க

### திலும் அமுனுகம சுட்டிக்காட்டு




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் உள்ளக அரங்கொன்றில் மே தினக் கூட்டம் நடத்தப்படும் முதல் தடவை இதுவெனவும், அக்கட்சியின் வங்குரோத்து நிலையையே இது எடுத்துக் காட்டுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அடைந்துள்ள வீழ்ச்சி நிலைமைக்கு மட்டக்களப்பிலாவது மே தினக் கூட்டமொன்றை நடத்தக் கிடைத்தமை பெரும் பாக்கியமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். (இ-7)

## மண்மேடு சரிந்து இளைஞன் பலி!



(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோணவல பத்தன பகுதியில் வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் சிக்குண்ட சகோதரர்கள் இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், சகோதரர்கள் இருவர் தமது வீட்டின் விறாந்தையில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த வேளையில் திடீரென வீட்டின் அருகில் உள்ள மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

இதில் மண்மேட்டில் சிக்குண்ட இருவரில் தம்பி மயிரிழையில் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் அண்ணன் மண்ணில் சிக்குண்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் லஹிரு கமகே என்ற 20 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை முதல் நாவலப்பிட்டி பிரதேசத்தில் கடுமையான மழை பெய்துள்ளது. இந்த மழையினால் ஏற்பட்ட அனர்த்தமே இந்த உயிரிழப்புக்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலை வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் உயிருடன் மீட்கப்பட்ட தம்பி சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சீரற்ற காலநிலை நிலவுவதனால் மண்சரிவு அபாயங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் இதனால் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (இ-7)



இலங்கை பகிரங்க சேவை அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் கே.கதிரமலை தலைமை தாங்கி உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மூத்த ஓய்வூதியர்கள் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் யாழ்.வரணி மத்திய கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை இதய சத்திரசிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.உதயசீலனும் கலந்து கொண்டனர்.

## நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் வீழ்ச்சி

# ஆளுமை கொண்டவர்கள் ஆளும் அரசில் இல்லை!

## கோத்தபாய பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)


திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஆளுமை கொண்டவர்கள் ஆளும் அரசாங்கத்தில் இல்லாததன் காரணத்தினால் நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

பாணந்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இந்த குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இந்த அரசாங்கத்தில் அபிவிருத்தி என்றாலும் சரி, சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்றாலும் சரி, பல்வேறு வாக்குறுதிகளை அளித்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்த முடியாது போனதற்கு காரணம் ஆளுமை கொண்டவர்கள் இல்லாமையே ஆகும்.

தலைமைத்துவம் இல்லை. திட்டம் இல்லை. ஆட்சி கவிழ்ப்பு மற்றும் பழிவாங்கல்களையே நோக்காகக் கொண்டிருந்தமையால் அபிவிருத்தி குறித்து சிந்திக்கவில்லை என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஹற்றனில் நேற்று நிலச்சரிவு இரண்டு குடியிருப்புக்கள் சேதம்



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயாவில் இருவேறு பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவில் இரண்டு குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. டிக்கோயா தரவளை கீழ்ப் பிரிவு பகுதியில் மூன்றாம் இலக்க லயன் தொடர் குடியிருப்பிலுள்ள ஒருவரின் சமையலறை முற்றாக சேதமாகியுள்ளது.

அத்துடன், வனராஜா மேல் பிரிவிலும் தொடர் குடியிருப்பின் பின்புள்ள மண்மேடு சரிந்ததில் குடியிருப்பொன்று பகுதியளவில் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகின்ற நிலையில் மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியில் தொடர்ந்து மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பாதிப்புக்குள்ளான குடியிருப்புகளை மத்திய மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீதரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ராம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் டிக்கோயா மாவட்ட தலைவர் ஆகியோர் பார்வையிட்டதுடன், மண்சரிவு அபாயம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினரின் கவனத்திற்கு மத்திய மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீதரன் கொண்டு சென்றுள்ளார். (இ-7)

## காட்டு யானை தாக்கி விவசாயி பலி!

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கார்மலை எனுமிடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5.45 மணியளவில் விவசாயி ஒருவரை காட்டு யானை வழிமறித்துத் தாக்கியதில் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடி குமாரவேலியார்கிராமம் சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த நாகண்டாப்போடி சங்கரப்பிள்ளை (வயது 64) என்பவரே கொல்லப்பட்டவர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மாடுகள் பராமரிப்பு மற்றும் விவசாயத்தை மேற்கொள்ளும் இவர் தனது வாடிக்குச் சென்றபோது திடீரென வழிமறித்த காட்டு யானைகளில் ஒன்று விவசாயியை விரட்டிச் சென்று தாக்கியுள்ளது.

இதன் காரணமாக அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். இது ஆட்களைத் தாக்கி வரும் தனியன் யானை என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அண்மைய சில நாட்களுக்கு முன்னரும் இதே பகுதியில் வைத்து விவசாயி ஒருவர் காட்டுயானை தாக்கியதில் உயிரிழந்ததாக கிராம மக்கள் தெரிவித்தனர். (இ-7)

## அரச பாடசாலைகள் அனைத்தும் 194 நாட்களே நடத்தப்படும்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரச பாடசாலைகள் அனைத்தும் இவ்வருடம் 210 நாட்களுக்குப் பதிலாக 194 நாட்களே நடத்தப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. வழமையாக அரச பாடசாலைகளில் வருடமொன்றுக்கு 210 நாட்கள் பாடசாலை நடத்தப்படல் வேண்டும் என்பது நியதி. ஆனால் இம்முறை இவ்வருடத்தில் வரும் விடுமுறை தினங்களைக் கருத்திற் கொண்டால் 210 நாட்கள் நடத்தமுடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனால் அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்தும் 194 நாட்கள் பாடசாலைகளை நடத்துமாறு கல்வி அமைச்சு சுற்று நிருபமொன்றை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட 33/2017 ஆம் இலக்க 31.08.2017ஆம் திகதி குறிப்பிட்ட கல்வியமைச்சின் சுற்று நிருபம் தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி தமிழ்-சிங்களப் பாடசாலைகளில் முதலிரு தவணைகளிலும் எந்த மாற்றமுமில்லை. ஆனால் மூன்றாம் தவணை செப்டெம்பர் 3ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 30ஆம் திகதி வரை நடைபெறும் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், முஸ்லிம் பாடசாலைகளில் முதலாம் தவணையில் மாற்றமில்லை, ஆனால் 2ஆம் தவணையில் இரண்டு கட்டங்களாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக ஏப்ரல் 18ஆம் திகதி தொடக்கம் மே 14ஆம் திகதி வரை பாடசாலை நடைபெறும். அதாவது புனித ரமழான் நோன்புக்காக 15.05.2018 தொடக்கம் 17.06.2018 வரைக்கும் முஸ்லிம் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும். இரண்டாம் கட்டமாக ஜூன் 18 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை பாடசாலைகள் நடைபெறும். முஸ்லிம் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக ஓகஸ்ட் 27ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 30ஆம் திகதி வரை திறக்கப்பட்டிருக்கும். இது தொடர்பான சுற்று நிருபம் சகல மாகாண கல்விச் செயலாளர்கள் தொடக்கம் பாடசாலை அதிபர்கள் வரை அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
14
09
1921

இறப்பு
08
04
2018

அமரர் துரைசாமி நவரத்தினம்

தந்தையே எங்களுக்கு அன்புகாட்டி
அன்பால் வாழ வைத்து ஒழுக்கத்தோடு வாழ கற்றுக் தந்தீர்
அத்தோடு எங்களுடன் இருந்து நல்வழி காட்டினீர்!
எங்களை விட்டு பிரிந்து சென்றாலும் உம்முடைய
ஆசி எப்பொழுதும் எங்களுக்கு இருக்கும்.
மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும்
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(3855)

மதவடி,
வல்வெட்டித்துறை.

உங்கள் மறைவால் வாடும்
பிள்ளைகள், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# பாரதம்

## காவிரி நீர் விவகாரம்

# மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் கொடுக்க தவறிவிட்டது செந்தில் பாலாஜி குற்றச்சாட்டு

(கரூர்)

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் பிரச்சினையில் மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுக்க தமிழக அரசு தவறி விட்டது என்று முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றம் சாட்டியுள்ளார்.




அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் கரூர் மத்திய நகர நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் உறுப்பினர் சேர்க்கை தொடர்பான ஆலோசனை கூட்டம் கரூரில் நடந்தது.

கூட்டத்திற்கு மத்திய நகர செயலாளர் கோல்டு ஸ்பாட் ராஜா தலைமை தாங்கினார்.

தியாகராஜன், அவை தலைவர் எஸ்.பி. லோகநாதன், துணை செயலாளர் தாரணி சரவணன், ஆரியூர் சுப்பிரமணி, பி.கே.எஸ். முரளி, ஒன்றிய செயலாளர் சட்டத்தரணி விஜயகுமார், தம்பி சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் அமைப்பு செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செந்தில்பாலாஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

காவிரி பிரச்சினையில் மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுக்க தமிழக அரசு தவறி விட்டது. உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காமல் மத்திய அரசு காலம் தாழ்த்தி வருவது தமிழக மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை தருகிறது. தற்போது கர்நாடக சட்டசபை தேர்தல் நடப்பதால் தமிழகத்தை மத்திய அரசு வஞ்சிக்கிறது.

காவிரி பிரச்சினையில் தமிழக உரிமையை நிலைநாட்ட அ.ம.மு.க. சார்பில் டி.டி.வி. தினகரன் உண்ணாவிரத போராட்டம், விமான நிலையம் முற்றுகை, ஆர்ப்பாட்டம் என தொடர்ச்சியாக போராட்டங்கள் நடத்தி வருகிறார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரை இந்த போராட்டங்கள் தொடரும். 18 எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்க வழக்கில் விரைவில் நல்ல தீர்ப்பு வரும்.

தமிழக மக்கள் நலனுக்கு விரோதமாக செயற்படும் எடப்பாடி அரசு விரைவில் வீட்டுக்கு அனுப்பப்படும் என மேலும் தெரிவித்தார். (7)

# பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் தாக்குதல்; 6 பேர் பரிதாபமாகப்பலி



(கராச்சி)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஆறு ஊழியர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத் துக்கு உட்பட்ட கரன் மாவட்டத்தில் ஒரு தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் தொலைபேசிக் கோபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வந்தது.

இந்நிலையில், அப்பகுதிக்கு நேற்று முன்தினம் இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் அங்கு பணியில் இருந்த ஆறு ஊழியர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் பஞ்பாப் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து உடனடியாக தப்பியோடி விட்டனர்.

இந்த தாக்குதலுக்கு இது வரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# இரு கொரிய ந... ஒரே நேர மண்...

(பியாங்யாங்)

இரு கொரிய நாடுகளுக்கிடையே புதிய உறவு மலர்ந்துள்ள நிலையில் தனி நேர மண்டலம் பின்பற்றி வந்த வடகொரியா தற்போது தென் கொரியாவுக்கு இணையாக தனது நேர மண்டலத்தை மாற்றியுள்ளது.


வட, தென்கொரிய நாடுகள் இடையே நிலவி வந்த 65 ஆண்டு கால பகை சமீபத்தில் முடிவுக்கு வந்தது. வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜேஇன் ஆகியோர் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தை அனைத்து

## நல்லநேரம்



# கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் 12 பேர் கொன்று குவிப்பு

## கடற்கொள்ளையர்கள் அட்டூழியம்



(லண்டன்)

தென்அமெரிக்க நாடான கயானாவில் இருந்து அண்டை நாடான சுரினாம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 மீனவர்கள் கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் உயிரிழந்தனர்.

தென்அமெரிக்க நாடான கயானாவில் இருந்து 4 படகுகளில் 20 மீனவர்கள் வட அட்லாண்டிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் அண்டை நாடான சுரினாம் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு படகுகளில் வந்த கடற்கொள்ளையர்கள் கயானா நாட்டு மீனவர்களைதாக்கினர்.

அவர்களிடம் இருந்து பணம், மீன்கள் மற்றும் பொருட்களை கொள்ளையடித்தனர். கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் 12 மீனவர்கள் உயிரிழந்தனர். 4 பேர் மட்டும் உயிர் தப்பினர். மற்றவர்களின் நிலை தெரியவில்லை.

இத்தகவலை கயானா நாட்டின் ஜனாதிபதி டேவிட் கிராங்கர் தெரிவித்தார். கடற்கொள்ளையர்களால் கொல்லப்பட்ட மீனவர்கள் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

சுரினாம் நாட்டுடன் இணைந்து கடற்கொள்ளையர்களை ஒடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார். (7)

# கொரிய எல்லையில் பொருத்தப்... ஒலிபெருக்கிகள் முற்றாக...

## இரு கொரிய பிரசாரத்துக்கு மு...

(சியோல்)

நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் வடகொரியாவும் தென்கொரியாவும், கொரிய எல்லையில் பொருத்தியிருந்த தமது ஒலிபெருக்கிச் சாதனங்களை முற்றாக அகற்றியுள்ள நிலையில், இரு கொரியாக்களுக்கிடையிலான எதிர் பிரசார நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

1950ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்குமிடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து பிளவுபட்ட இரு கொரியாக்களும், கொரிய எல்லையில் ஒலிபெருக்கிச் சாதனங்களைப் பொருத்திவைத்து எதிர் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தன.

இந்நிலையில், வடகொரிய மற்றும் தென்கொரியத் தலைவர்களுக்கிடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு, பன்முன்ஜொம் சமாதானக் கிராமத்தில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றதைத் தொடர்ந்து விரோத மனப்பான்மையைக்

# வெளிநாடு

# நாடுகளுக்கும்

# ண்டலம் அமுல்

## ரம் ஆரம்பம்

தரப்பினராலும் பாராட்டப்பட்டது.

வெகு விரைவில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பையும் கிம் ஜாங் உன் சந்தித்து பேச இருக்கிறார். கிம் - மூன் சந்திப்பின் போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

அதில், நேர மண்டலமும் ஒன்றாகும். தென்கொரியாவின் நேரத்தை விட வட கொரியா அரை மணி நேரம் பின்னோக்கி இருந்தது.

தற்போது, வடகொரியா தனக்கென இருந்த நேர மண்டலத்தை தற்போது விட்டுக்கொடுத்துள்ளது. அதாவது தென்கொரிய நேரத்திற்கு இணையாக, வடகொரிய நேரம் அரை மணிநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இனி இரு கொரிய நாடுகளுக்கும் ஒரே நேர மண்டலம் தான் பொதுவாக இருக்கும். கடந்த 4 ஆம் திகதி முதல் இந்த மாற்றம் அமுலுக்கு வந்துள்ளது. (7)

## வடகொரியாவுடனான சந்திப்பு

# அணுவாயுதமயமாக்கல் பிரச்சினை தொடர்பில் அமெரிக்கா யதார்த்தமாக செயற்பட வேண்டும்

## மெக்சிக்கோ முன்னாள் ஆளுநர் வேண்டுகோள்

(மெக்சிக்கோ)

அணுவாயுதமயமாக்கல் பிரச்சினை தொடர்பில் யதார்த்தமாகச் செயற்படவேண்டுமென அமெரிக்காவிடம் புதிய மெக்சிகோவின் முன்னாள் ஆளுநர் பில் ரிச்சர்ட்சன் பரிந்துரைத்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் வட கொரியாவிற்கு இடையிடையிலான பேச்சுவார்த்தை வருகின்ற வாரங்களில் நடைபெறுவது உறுதியான நிலையில் அவர் இவ்வாறு பரிந்துரை செய்தமை குறிப்பிடத்தக்கது.



பில் ரிச்சர்ட்சன் சர்வ தேச ஊடகமொன்றிற்குப் பேட்டியளிக்கும்போது வட கொரிய ஜனாதிபதியுடனான முதல் சந்திப்பு அணுவாயுத மயமாக்கலுக்கான அணுகுமுறை திருப்தியான முடிவினைத் தந்துவிடும் என்பதாகத் தோன்றவில்லை. ஆனால் இந்தச் சந்திப்பானது நிச்சயமாக அதற்கான மிகப் பெரிய ஆரம்பமாக இருக்கும். ஆகவே அணுவாயுத மயமாக்கல் பிரச்சினை தொடர்பில் அமெரிக்கா யதார்த்தமாகச் செயற்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் புதிய மெக்சிகோவின் ஆளுநரான பில் ரிச்சர்ட்சன், முன்னாள் அமெரிக்க வடகொரிய நடுவராகவும், வடகொரியாவிற்கான அமெரிக்கத் தூதராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# லண்டன் வைத்தியசாலை மோசமான போர் மண்டலமாக உருவெடுத்துள்ளது

## ட்ரம்ப் விசனம்

(லண்டன்)

லண்டன் வைத்தியசாலை கத்திக் குத்து குற்றங்கள் மூலம் மோசமான போர் மண்டலமாக உருவெடுத்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தேசிய துப்பாக்கிகள் சங்கம் நடத்திய பேரணி ஒன்று அமெரிக்காவின் Dallas, Texas எனும் மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விழாவில் உரையாற்றும் போது, அமெரிக்காவின் துப்பாக்கிப் பாவனைகள் தொடர்பான உரிமைகள் குறித்தும் தேசிய துப்பாக்கிகள் சங்கம் குறித்தும் பாராட்டிப் பேசினார்.

மேலும் அவர் பெயர் குறிப்பிடப்படாத லண்டன் வைத்தியசாலை ஒன்று போர்மண்டலமாக மாறிவருகின்றது. அங்கே துப்பாக்கிகள் இல்லை. ஆனால் கத்திகள் மூலமாக வன்முறை நடக்கின்றது. வைத்தியசாலையின் தரைகள் முழுவதும் இரத்தமாக இருக்கின்றது எனும் செய்தியினை சிலநாட்களுக்கு முன்னர் பத்திரிகை செய்தி ஒன்றில் வாசித்ததாகவும் அவர் தெரிவித்தார்.



இந்தவருடத்தின் கோடை காலத்தில் லண்டன் பயணம் மேற்கொள்ளவிருந்த டொனால்ட் ட்ரம்ப் வெகுஜன ஆர்ப்பாட்டங்களுக்கான அழைப்புக்கள் காரணமாக அப்பயணத்தினை இரத்துச் செய்திருக்கும் நிலையில் நேற்று முன்தினம் இவ்வாறான கருத்தினையும் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# பாக். நிலக்கரி சுரங்கத்தில் திடீர் வெடிவிபத்து

## 23 பேர் உயிரிழப்பு

(கராச்சி)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 23 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்துக்கு உட்பட்ட குவெட்டா பகுதியில் ஒரு நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ளது.

இந்த நிலக்கரி சுரங்கத்தில் நேற்று தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது திடீரென அங்கு வெடி விபத்து ஏற்பட்டது. இதில் சில தொழிலாளர்கள் சுரங்கத்தினுள் சிக்கிக்கொண்டனர்.

இதையடுத்து உடனடியாக மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த விபத்தில் 23 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுவரை 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் பலர் சுரங்கத்தினுள் சிக்கியுள்ளதாகவும், அவர்களை உயிருடன் மீட்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுரங்கத்தில் உள்ள மீத்தேன் வாயுவால் இந்த வெடி விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள நிலக்கரி சுரங்கங்களில் வெடிப்பு சம்பவங்கள் அடிக்கடி ஏற்படுவதாக கூறப்படுகிறது. சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாததே இந்த விபத்துக்கு காரணம் எனவும் கூறப்படுகிறது. (7)

# பாகிஸ்தானில் பல்வேறு வன்முறைகளில் ஈடுபட்ட 11 பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை

## பாக். இராணுவத்தளபதி உத்தரவு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பல்வேறு வன்முறை தாக்குதல்களில் ஈடுபட்ட 11 பயங்கரவாதிகளுக்கு நீதிமன்றம் அளித்த மரண தண்டனையை உறுதிப்படுத்தி இராணுவ தளபதி நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த 16-12-2014 அன்று பெஷாவர் நகரில் உள்ள இராணுவப் பள்ளியின் மீது தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய கொலைவெறி தாக்குதலில் சுமார் 150 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த கொடூரச்சம்பவத்துக்கு பின்னர் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான வழக்குகளை விசாரித்து, தண்டிக்கும் பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இரகசிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றில் நடைபெற்று வந்த சில வழக்குகளில் வாதப் பிரதிவாதம் முடிந்த நிலையில் மிகக் கொடூரமான தாக்குதல்களில் ஈடுபட்ட 11 பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த மரணதண்டனையை உறுதிப்படுத்தி பாகிஸ்தான் இராணுவ தளபதி காமெர் ஜாவெத் பாஜ்வா உத்தரவிட்டுள்ளார். (7)

# ஆப்கானில் தலிபான்கள் வசமிருந்த மாவட்டத்தை மீட்டெடுத்த இராணுவம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடபகுதியில் தலிபான் பயங்கரவாதிகளிடம் சிக்கிய கனிம வளங்கள் நிறைந்த கோகிஸ்தான் மாவட்டத்தை இராணுவம் நேற்று முன்தினம் மீட்டது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2011 ஆம் ஆண்டு அமெரிக்க படைகள் திரும்ப பெறப்பட்ட பின்னர், தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. நாட்டின் சில பகுதிகளை தங்கள் வசம் பிடித்துவைத்துள்ள தலிபான்கள் போட்டி அரசு ஒன்றை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் உள்ள பதக்ஷான் மாகாணத்தின் கோகிஸ்தான் மாவட்டத்துக்குள் தலிபான் பயங்கரவாதிகள் கடந்த வியாழக்கிழமை துப்பாக்கிகள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் புகுந்தனர். அங்கிருந்த சோதனைச் சாவடிகள், மற்றும் பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தினர்.



பயங்கரவாதிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாத பாதுகாப்பு படையினர் உயிருக்கு பயந்து தப்பியோடினர். சிலர் எதிர் தாக்குதல் நடத்தினர். இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 15 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். சுமார் 20 வீரர்கள் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடபகுதியில் கனிம வளங்கள் நிறைந்த கோகிஸ்தான் மாவட்டத்தை தலிபான்கள் கைப்பற்றியதன் மூலம், இப்பகுதியில் மட்டும் 3 மாவட்டங்கள் இவர்களிடம் சிக்கி இருந்தன.

இந்நிலையில், இப்பகுதியை மீட்பதற்காக கூடுதலாக இராணுவப் படைகள் நேற்று முன்தினம் கோகிஸ்தான் மாவட்டத்துக்குள் புகுந்தன.

அங்கு இருதரப்பினருக்கும் நடைபெற்ற மோதலில் அந்த மாவட்டம் மீட்கப்பட்டதாக ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# தப்பட்டிருந்த ாக நீக்கம்

## கு முற்றுப்புள்ளி

கைவிட்டு ஒற்றுமையுடன் நடக்க இணக்கம் காணப்பட்டது.

இதனையடுத்து, இரு தலைவர்களும் நல்லிணக்கச் செயற்பாடுகளை மாறிமாறி முன்னெடுத்துவரும் நிலையில், கொரிய எல்லையில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்கள் கடந்த வெள்ளிக்கிழமை முற்றாக அகற்றப்பட்டுள்ளதாக, சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# கூட்டு எதிர்க்கட்சியைக் கண்டு அரசாங்கம் அஞ்சுகிறது–மகிந்த



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் மீது ஏற்பட்டுள்ள அச்சத்தின் காரணமாகவே காலி முகத்திடலில் மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகிந்த அணியின் மே தினக் கூட்டத்தை காலி முகத்திடலில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் அரசாங்கத்தை காட்டிலும் தமது கட்சியின் கூட்டத்திற்கே மக்கள் திரண்டு வந்திருந்ததாகவும் மகிந்த தெரிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்டே இம்முறை காலி முகத்திடலை வழங்குவதற்கு அரசாங்கம் மறுப்பு தெரிவித்ததென மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இன்று காலியில் நடைபெறவுள்ள தமது மே தினக்கூட்டமானது, மக்கள் தற்போது முகங்கொடுத்துள்ள வரி தொடர்பிலான பிரச்சினைக்கு குரல் கொடுக்கும் கூட்டமாகவே அமையுமென்றும் மகிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இதன்போது அரசாங்கத்துக்கு பல்வேறு அறிவிப்புக்களையும் விடுக்கவுள்ளதாக மகிந்த தெரிவித்தார். (இ-7)

# உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு ரூ.135 மில்லியன் மாதாந்தக் கொடுப்பனவு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 8,691 உறுப்பினர்களுக்கும், மாதம்தோறும், 135 மில்லியன் ரூபா கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருவதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாநகர முதல்வர்களுக்கும் தலா 30 ஆயிரம் ரூபாவும், பிரதி முதல்வருக்கு 25 ஆயிரம் ரூபாவும், நகரசபை முதல்வர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும், பிரதி முதல்வருக்கு 20 ஆயிரம் ரூபாவும், பிரதேச சபை தவிசாளருக்கு 25 ஆயிரம் ரூபாவும், பிரதி தவிசாளருக்கு 20 ஆயிரம் ரூபாவும், ஏனைய உறுப்பினர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும் மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.

அடிப்படைக் கொடுப்பனவு தவிர, போக்குவரத்து, தொலைபேசி கட்டணம், முத்திரைக் கட்டணம் போன்ற கொடுப்பனவுகளும் அளிக்கப்படுகின்றன.

உள்ளூராட்சி சபைகள் கல்வி, நிதி, சுகாதாரக் குழுக்களை உருவாக்கும் அதிகாரம் கொண்டவை. ஒவ்வொரு அமர்வுக்கும் உறுப்பினர் ஒருவர் 550 ரூபா தொடக்கம் 1500 ரூபா வரை கோர முடியும்.

அதிகபட்சமாக, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஒருவர், 33,500 ரூபாவை முழுக் கொடுப்பனவாகப் பெற்றிருக்கும் நிலையில், குறைந்தபட்சமாக யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் 20 ஆயிரம் ரூபாவை மாத்திரம் பெற்றுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளுக்காக அரசாங்கம் 606.35 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

எஞ்சிய கொடுப்பனவுத் தொகையை உள்ளூராட்சி சபைகள் தமது வருமானத்தில் இருந்து வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதையல் தேடிய ஐ.தே.க.அமைச்சர்

(கொழும்பு)

அநுராதபுரம் - இபலோகம, புகொல்லாகம பலும்கல பகுதியில் புதையல் தேடியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மிக முக்கியமான அமைச்சர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கிராமம் ஒன்றை அமைக்கும் போர்வையில் பலும்கல பகுதியில் தொல்பொருள் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த 15 ஏக்கர் காணி சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

பெக்கோ இயந்திரம் ஒன்றை பயன்படுத்தி காணிகளை சுத்தம் செய்துள்ளதனால் அப்பகுதியில் காணப்பட்ட விஹாரை ஒன்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதையல் தோண்டும் நோக்கிலேயே இவ்வாறு காணிகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் பின்னணியில் முக்கிய அமைச்சர் ஒருவர் செயற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# பாதாள உலகக்குழு உறுப்பினர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரான திலீப் என்று அழைக்கப்படும் திலீப் ரோஹன ரோட்ரிகோ என்பவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

கண்டி, மைலைப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# கையிருப்பிலுள்ள பால்மா விலையில் மாற்றம் செய்தால் கடும் தண்டனை

(கொழும்பு)

மே மாதம் 5ஆம் திகதி முதல் உற்பத்தி செய்யப்படும் பால்மாவிற்கே புதிய விலை பொருந்தும். எனவே கையிருப்பிலுள்ள பால்மாவை புதிய விலைக்கு விற்பனை செய்வோர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பால்மா விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை அனுமதி வழங்கியிருந்தது.

அதற்கமைய 400 கிராம் நிறையுடைய பால்மாவின் விலை இருபது ரூபாவாலும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை ஐம்பது ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பேச்சுக் கொடுங்கள்

உறவினர் இல்லத் திருமணத்தில் அனைவரையும் ஒரு சேரச் சந்திக்கிறோம். அருகருகே அமர்ந்திருக்கிறோம். ஆனால் சரிவரப் பேசிக்கொள்கிறோமா என்றால் இல்லை. திருமணம் முடிந்து ஊர் திரும்பியதும் திருமணப் பரப்பில் (?!) உங்களுடன் எதுவும் பேச முடியவில்லை என்று அவருக்குக் கடிதம் எழுதுகிறோம்.

நம் குடும்ப உறுப்பினர்களை மருத்துவமனைக்கு அழைத்துப் போகிறோம். அல்லது ஒரு பொது இடத்திற்குத் தெரிந்தவர்களை அழைத்துப் போகிறோம். இது பேசக் கிடைத்த அரிய சந்தர்ப்பம். மனம் விட்டுப் பேச வேண்டிய விஷயங்கள் முதல் அவசியமாகப் பரிமாறிக் கொள்ள வேண்டிய விடயங்கள் வரை எவ்வளவோ பேசலாம். ஆனால் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டுச் சண்டைக்காரர்களைப் போல் வெறுமனே உட்கார்ந்து விட்டு எழுந்து வந்துவிடுகிறோம். அப்புறம் அதைக் கேட்க விட்டுப் போச்சே! இதைப் பேச விட்டுப் போச்சே! என்று நினைப்புக் கப்பால் மனச் சுவர்களை அடிஅடி என்று அடித்து நம் மனத்தை நாமே காயப்படுத்திக் கொள்கிறோம்.

பயணங்களின் போது கூட சக பயணிகளிடம் விரோதிகளைப் போல் நடந்து கொள்கிறோம். தொணதொண என்று பேசாவிட்டாலும் நான்கு வார்த்தைகள் பேசலாமே! பெரும்பாலும் இந்த மனநிலை பயணத்தை மிக இனிமையான ஒன்றாக ஆக்கிவிடுகிறது. எதிர்பாராதவிதமாக ஒரு விமானியைச் சந்திக்கிறோம். ஒரு மளிகைக் கடைக்காரரைச் சந்திக்கிறோம். ஒரு கட்டட காண்ட்ராக்டரைச் சந்திக்கிறோம். அவர்கள் முகம் கொடுத்துப் பேசும் இயல்பு உள்ளவர்கள் என்று தெரிந்தால் அவர்களிடமிருந்து ஒரு பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள் செய்திகளை உறிஞ்சி விடும் பிளாட்டிங் பேப்பராக நாம் மாறி விட வேண்டும்.

நாம் வளவளவென்று பேசினால்தான் பிறருக்குப் பிடிப்பது இல்லை. அவர்கள் விரும்பும் கேள்விகளைக் கேட்டால் பெரும்பாலும் அதை விரும்புவார்கள்.

டாக்ஸி டிரைவர், போர்ட்டர், பொலிஸ்காரர், அணு ஆராய்ச்சி இன்ஜினியர் என யார் கிடைத்தாலும் சரி நான் விடுவது இல்லை.

சட்டென ஒரு தத்துவத்தை இவர்கள் உதிர்ப்பார்கள். அது அனுபவத்தில் முகிழ்த்த முத்து என்பதால் நமக்கு அது பெரிதும் பயன்படும். அதுமட்டுமல்ல அவர்களது வெற்றியின் காரணம் புலப்படும். அவர்களது தோல்விக்கும் விளக்கம் கிடைக்கும். ஒரு துறையின் நெளிவு சுளிவுகளை அவரவர் வாயிலாகவே அறியும் போது; அந்த அறிவு நமக்கு மிகவும் பயன்படும். அதுமட்டுமல்ல இத்தகைய உரையாடல்கள் பரஸ்பர அன்பையும் அக்கறையையும் வளர்க்கவல்லவை.

இனி எங்கும் போனாலும் 'உம்'மென்று இருக்கமாட்டீர்கள் என்கிற நம்பிக்கை வந்துவிட்டது!

**லேனா தமிழ்வாணன்**

# போருக்குப் பின் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குச் சட்டம் தீர்வாகுமா?


மக்கள் தமக்கு அநீதி ஏற்பட்டுள்ளது என எண்ணும் சந்தர்ப்பத்தில் தண்டனை, இழப்பீடு மற்றும் சட்ட நிவாரணம் என்பவற்றை மக்கள் நீதிமன்றங்களை நாடிப் பெற்றுக் கொள்ள முடியும். மக்கள் அச் சேவைகளை சட்டத்தரணி, பொலிஸ் மற்றும் அரசதுறைகள் ஊடாக பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

போருக்குப் பின் மக்கள் அதிகம் கூடும் இடங்களாக பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள் மற்றும் நீதிமன்றங்கள் ஆக உள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் மக்களிடம் ஏற்பட்டுள்ள அதிக பிணக்குகள் என பொதுவாக சொல்லப்படுகின்ற போதும் இதற்கான உண்மைக் காரணம் என்ன? அதற்கான தீர்வுத்திட்டம் என்ன? என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்ற ஒன்றிணைந்த திட்டம் தொடர்பாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் நோக்க வேண்டியுள்ளது.

போருக்கு பிற்பட்ட காலத்துப் பிணக்குகளில் அதிகம் குடும்பப்பிணக்குகள் மற்றும் பணப் பிணக்குகள், மது போதை காரணமாக ஏற்படும் சிறுகுற்றங்கள், அதிக வீதி விபத்துக்கள், தற்கொலைச் சம்பவங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பல தார திருமணங்கள் என்பன அதிக அளவில் பதியப்படும் மக்கள் பிரச்சினைகளாக உள்ளன.

இதற்கு பிரதான காரணமாக சொல்லப்படுவது பொதுவாக மது பாவனையே. போரின் போது திருமணம், சீட்டு நடவடிக்கைகள், வங்கி கடன்கள்,தவணை முறைக்கடன்கள்,திட்டத்தில் மக்கள் பொருட்களை வாங்குதல் மற்றும் நுண்கடன் திட்டம் என்பன என்று பொதுவான காரணங்கள் என மக்கள் மற்றும் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்துக்கள் ஆக உள்ளது. எனினும் வெளித் தெரியும் அடிப்படைக் காரணமாக உள்ள இக் காரணங்களை நிறுத்துவதும் தடுப்பதும் பாரிய பிரச்சினையாக மக்களிடம் காணப்படும் போது இதன் உண்மைக் காரணத்தை மக்களும் சமூக நிறுவனங்களும் கண்டறிய தவறி விட்டதோ என்ற எண்ணம் உருவாகியுள்ளது.

திருமணம் என்பது தாங்கள் எதிர்பார்த்த,முற்றிலும் எதிர்பார்ப்புக்கு அமைந்த



ஒருவரைத் திருமணம் செய்வது எக்காலத்திலும் ஏற்புடையதன்று. தமிழ் மக்களிடையே காணப்படும் பேச்சுத் திருமணம் அவ்வகையில் அமைந்ததே.காலம் காலமாக இதுவே தமிழ் மக்கள் மத்தியில் நடந்து வருகின்றது.போரின் போது நடந்த திருமணம் என்பது அவசரகதியில் நடந்த போதும் அதுவும் பேச்சுத் திருமணவகையில் அமைந்தே காணப்பட்டது. திருமண நிகழ்வில் தான் தம்பதியினர் தங்களை கண்டுகொள்ளும் வழக்கம் காணப்பட்ட சமூகத்தில் அவசரமாக நடந்த திருமணம் என்பது எப்படி பாதிக்கும் என்பது கேள்வியே.

சீட்டு மற்றும் கடன் திட்டங்கள் மக்களிடம் காலம் காலமாக இருந்துவரும் பழக்கமாக காணப்படுகின்றது. இது ஒரு புதிய முறையன்று. ஆனால் ஏன் இப்போது இது மக்களிடம் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய வேண்டியுள்ளது.

மது போதை திருவள்ளுவர் காலம் முதல் கள்ளுண்ணாமை அதிகாரத்தில் மதுவுக்கு எதிராக கருத்துக்கள் இருந்து வருகின்றன. மக்களிடம் மதுபோதைப் பாவனை புதியவிடயம் அன்று. மது குடித்த ஒருவருக்கு தன்னுடையவாகனம், தன்னுடைய வீடு, தன்னுடைய மனைவி தன்னுடையதாய், தன்னுடை பிள்ளைகள் எனத் தெரிகின்ற போது எப்படிசிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் ஏற்பட மது போதைகாரணம் ஆகிறது என்பதும் ஒருகேள்வியே.

போரின் போது ஏற்பட்ட திருமணம் சீட்டு, தவணை முறைகட்டணம், மதுபோதை பாவனை என்பன முற்காலத்தில் இருந்து வந்த போதும் தற்காலத்தில் ஏன் இந்த தாக்கம் என்பதை ஆராயும் போதே இதற்கான தீர்வுகிடைக்கும் என்பது உண்மை.

மாறிவரும் மக்களின் வாழ்க்கைமுறை,குறைந்த பொருளாதார நிலை, உழைக்கும் நபர்களின் இழப்பு, பருவ நிலைமாற்றம், விவசாயக் கூலிகளின்தொழில்இல்லாமை, மக்கள் தொகையை தாண்டிய நவீனதொழில் இயந்திர வருகை, மக்கள் இடப்பெயர்வில் சொத்துக்களை இழந்து மீண்டும்வந்து மற்றவர்களைப் போல பொருளாதார நிலைக்கு வரமுற்படும்போது அவர்கள் சரியான வழிகாட்டல் இல்லாமல் அவர்கள் தெரிவு செய்யும் முறைகள் என்பன மக்களிடம் காணப்படுகின்ற பிரச்சினைகளின் உள் மூலக் கூறுகள் ஆக காணப்படுகின்றது.

விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்சிகள், சினிமாக்கள் மக்களை தமது கலாசாரம் இது என பின்பற்ற வைக்கும் கருவியாக மாறியுள்ளது. இது தொடர்பான சரியான விழிப்புணர்வு மக்களிடம் காணப்படவில்லை. இது தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்வதில் எம்மத்தியில் உள்ளசமூக நிறுவனங்கள் ஆர்வம் காட்ட வேண்டிய கட்டாய தேவை நெருங்கியுள்ளது.

குடும்பப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்பது சரியான பாலியல் அறிவு மற்றும் பாலியல் பழக்கம் மக்கள் மத்தியில் இல்லாமை, பாலியல் தொடர்பான விடயத்தை ஒருபரம இரகசியமாக பார்க்கும் எம் சமூகம் அதை சரியான முறையில் சந்ததிக்கு கடத்துவதாமை, இனப்பெருக்க சுகாதாரம் என்னும் போது அதுவெறும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஆனபாலியல் செயற்பாடு எனப் பலர் கருதுகின்றமை, அதுமட்டுமன்றி குழந்தை வளர்ப்பு, ஆண் பெண் வேறுபாடு, ஆண் பெண் சமத்துவம், பால், பால் நிலை தொடர்பான விடயங்கள், குடும்பத்தில் ஆணின் கடமை, பெண்ணின் கடமை, கருவுற்ற பெண்களை கவனிக்க வேண்டிய ஆணின் பொறுப்பு, குழந்தைதொடக்கம் மனித வளர்ச்சி படிநிலை, அதில் ஏற்படும் உடல், உள மாற்றம், அவை தடைப்படும் போது ஏற்படும் உளப் பிரச்சினைகள் என்பன இனப்பெருக்க சுகாதாரம் என்ற விடயத்தில் உள்ளடங்கும். இது பற்றிய அறிவு முற்காலத்தில் பாட்டி தாய் வழியாக பிள்ளைகள் கற்றுவந்தார்கள். இப்போது உள்ள தாய்மார்களுக்கு இந்த அறிவுகுறைந்து போக வரும் சந்ததிகளுக்கு இவை கடத்தப்படுவது குறைவாகவுள்ளது. இதன் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளே அதிக குடும்பப் பிரிவு, சிறுவர் துஷ்பிரயோகம் பெண்களுக்கு எதிரான வன்முறை என்பன வற்றிற்கு அடிப்படைக் காரணமாகவுள்ளது. இவை பற்றிய அறிவு பாடசாலை மட்டத்திலே வழங்கப்பட வேண்டும் என்ற திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இப் பாடத்தை தனி ஒரு பிரிவாக எடுத்து கட்டாயபாடம் ஆக்கும் போது பிள்ளைகள் அதை கற்பது அதிகமாக ஏற்பட்டு இனிவரும் சமூகப் பிறழ்வுகளைத் தடுக்கமுடியும். வாழும் கலையை கற்காமல் எந்தத் துறையில் பட்டம் பெற்றும் அது சமூக வாழ்க்கைக்கு உகந்ததாக அமையப் போவதில்லை. இதுவே இன்று எம் மக்கள் கூட்டம் கூட்டமாக பொலிஸ் நிலையம் மற்றும் நீதிமன்றில் நிற்பதற்கு காரணமாக உள்ளது.

மேலே குறிப்பிட்டது போல் திருவள்ளுவர் காலம் முதல் மதுபாவனை இருக்கும் போது இப்போதுமட்டும் ஏன் எம்மிடையில் இம் மது போதை பாவனை அதிகரிப்பும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அக்காலத்தில் இயற்கை வழி வரும் பனை, தென்னைகள் வகைகளை உண்டு வந்தனர். இது எமது சூழல் மற்றும் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றதாகவும் அதிக போதையை தராததாகவும் இருந்தது. இன்று நாம் மேற்கத்தேய மது பாவனை நாகரீகம் என்று அடிமைப்பட்ட போது அதன் அற்ககோலின் அளவுஉண்மை நிலைவேதிப் பொருட்களின் கலப்பு என்பன தெரியாமல் உள்ளது. மற்றும் எமது சமூகத்தில் பரவவிடப்பட்டிருக்கும் புதிய புதிய போதைப் பொருட்கள் பாடசாலை பிள்ளை முதல் பேருந்து பயணி வரை இன்று தொற்றிக் கிடக்கிறது. இதன் தாக்கத்தின் அளவு இன்னும் காணப்படவில்லை. இவைகளே நாம் இன்று எதிர் கொண்டிருக்கும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், அதிகரித்துவரும் குடும்பப் பிணக்கு என்பன இவைகளின் பாதிப்பு என கூற முடியும். இவைகள் சட்டம், தண்டனை, நீதி என்பவற்றின் மூலம் தீர்க்கப்படும் பிரச்சினைகள் என்று மக்கள் அதை நாடிய போதும் அதற்கான முழு நிவாரணமும் கிடைக்கப்படுகிறதா? ஆனால் மேற்குறிப்பிட்ட உண்மைக் காரணிகள் அகற்றப்பட்டு ஒரு சுய ஆளுமை கொண்டசமூகம் அமையப் பெற வேண்டும். அதுவே இப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாகஅமையும்.

எஸ்.வினோத்
சட்ட உதவி ஆணைக்குழு,
கிளிநொச்சி.

# கருணாவின் கட்சி மகிந்தவுடன் இணைவு

(கல்லடி)

கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி எதிர்காலத்தில் மகிந்த அணியுடன் இணைந்து பயணிக்கவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் வி.கமலதாஸ் தெரிவித்துள்ளார்.



இந்த நிலையில் அதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

எமது கட்சி ஆரம்பிக் கப்பட்டு ஒரு வருடத்திற்குள் வந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில், ஏழு உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டது.

தமிழர்களை ஐக்கியப் படுத்த வேண்டும் என்ற பிரதான நிலைப்பாட்டில் மட்டக்களப்பு தெற்கு பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்கான ஆதரவினை வழங்கியிருந்தோம்.

மட்டக்களப்பு வடக்கு பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கு எங்களது ஆதரவினை வழங்கியிருந்தோம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் எதிர்வரும் மாகாண சபை தேர்தலுக்கான தேர்தல் தொகுதிகள் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி அறிவிக் ப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதில் ஐந்து தமிழர்களையும், ஒரு இஸ்லாமியரையும் உறுப்பினராக கொள்ளும் வகையில் எல்லை நிர்ணய குழுவில் எங்களது சிபாரிசுகளை வழங்கியிருந்தோம்.

ஆனால் வெளியிடப்பட்டுள்ள தொகுதி முறை கிழக்கு மாகாண தமிழர்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் வகையில் அமைந்துள்ளது.

75 வீதமான தமிழர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு தமிழ் உறுப்பினர்களையும், 25 வீதம் கொண்ட முஸ்லிம்களுக்கு இரண்டு பிரதிநிதிகளையும்பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் தொகுதி பிரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை ஒரு அபாய எச்சரிக்கையாகவே நாங்கள் பார்க்கின்றோம். இந்த நிலையில் தேசிய அரசில் மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பயணிப்பதற்கான முதல்கட்ட பேச்சுவார்த்தையினை மேற்கொண்டுள்ளோம்.

இதன்போது வெற்றிகரமான உடன்படிக்கையொன்றினையும் செய்துள்ளோம். இதன்கீழ் ஏராளமான தமிழ் இளைஞர்களை எமது கட்சியுடன் இணைத்து அரசியல் பாசறைகளை நடத்தி கட்சி செயற்பாடுகளில் ஈடுபடுத்தவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சு.கவைப் பிளவுபடுத்த சிலர் முயற்சி;
# மட்டக்களப்பு மே தினக் கூட்டத்தில் 16 பேரும் கலந்து கொள்வோம்

## ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதாக காட்டுவதற்கு சிலர் முன்னெடுத்து வரும் முயற்சிக்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென அரசாங்கத்திலிருந்து விலகிச் சென்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேரில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரட்ன தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் இன்று இடம்பெறவுள்ள மே தினக் கூட்டத்தில் அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேரும் கலந்து கொள்வார்களா? என வினவியதற்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கட்சியின் ஒரு அம்சமாக நடைபெறும் இக்கூட்டத்தில் நாம் கலந்துகொள்கின்றோம். நாம் இதில் கலந்துகொள்ளாது போனால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாக காட்டுவதற்கு சிலர் எதிர்பார்த்துள்ளனர்.

அவ்வாறானவர்களுக்கு கட்சியை கொச்சைப்படுத்த நாம் இடமளிக்கமாட்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திருகோணமலையில் அமெரிக்க உளவு அணி

(திருமலை)

அமெரிக்காவின் (CIA) என்ற உளவுப்பிரிவின் வைத்திய உளவு அணியொன்று திருகோணமலையில் தரித்து நின்று நோயாளிகளுக்கு வைத்திய சிகிச்சை அளித்து வருகின்றது.

அதேவேளை மற்றொரு அணியொன்று மூதூர் கிண்ணியா திருமலை பகுதி முஸ்லிம் பகுதிகளில் சர்வ சாதாரணமாக பொதுமக்களுடன் நன்கு பழகிப்பேசி வருகின்றார்கள்.

இதேவேளை அமெரிக்க அணியோடு மூதூர் உள்ளூர் அணியும் இணைந்து இசைக் கச்சேரியுடன் ஆடல் பாடல் நடத்தினர்.

இதே போன்று நேற்று முன்தினம் கிண்ணியா துறையடி எழிலரங்கம் தௌபீக் ஸ்டேடியத்தில் அமெரிக்க உளவுத்துறை அணியால் இசைக் கச்சேரியுடன் ஆடல் பாடல் நிகழ்வு நடத்தப்பட்டது.

கிண்ணியா, மூதூர் பகுதிகளில் சிறு சிறு வீதிகளையும் விட்டு வைக்காமல் முற்று முழுதாக கரையோரப் பகுதிகளில் இந்த உளவு அணியின் கண்காணிப்பு மிக அதிகமாக இருந்துள்ளது.

சீனா அம்பாந்தோட்டை பகுதியை முற்றாக தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது போன்று அமெரிக்கா திருமலை பகுதியை இலங்கை அரசிடமிருந்து இந்தியாவின் ஒப்புதலோடு பெறும் வாய்ப்புள்ளது.

திருமலை துறைமுகத்தை குறி வைத்து அமெரிக்கா இலங்கையை நெருக்கலாம். அதற்காக இலங்கையின் போர்க்குற்றத்தை மீண்டும் கையில் எடுக்கலாம்.

அதன் முன்னோடியாக திருமலை சுற்று வட்டாரம் கரையோரம் அந்தப் பகுதி மக்களின் சூழ்நிலை மற்றும் சுற்றுச் சூழல் பகுதிகள் முற்றாக கண்காணிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் குறித்த உளவுத்துறை அணி கொண்ட கப்பல் நாளை திருமலையை விட்டு புறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி, பிரதமரின் சகாக்கள் போட்டி போட்டுத் திருட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சகாக்கள் போட்டி போட்டுக்கொண்டு திருட ஆரம்பித்துள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.



ஊழலுக்கு எதிராகவும் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு வலியுறுத்தி கூட்டு எதிர்க்கட்சி மே தினக் கூட்டத்தை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சிக்குள் பல்வேறு நிலைப்பாடுகள் காணப்பட்டாலும் கட்சி என்ற வகையில் ஒருமித்த தீர்மானமே எடுக்கப்படும்.

அத்துடன் கூட்டு எதிர்க் கட்சி மீது அச்சம் கொண்டுள்ள சில அரசியல்வாதிகள் கூட்டு எதிர்க்கட்சிக்குள் நெருக்கடிகளை ஏற்படுத்த முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்காது. மக்கள் எம்முடனேயே இருக்கின்றனர் எனவும் பியல் நிஷாந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# பால்மா விலை அதிகரிப்புக்கு ஜனாதிபதி, பிரதமர் எதிர்ப்பு
## அமைச்சர் ஹக்கீம் தகவல்



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் போன்றோர் எதிர்ப்பை வெளிப்படுத்திய நிலையிலும் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

பால்மா விலை அதிகரிப்பு குறித்து தற்போது விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

பால்மாக்களின் தரம், சந்தைப்படுத்தல் நிறுவனங்களுக்கு இடையே மாறுபட்டதாக காணப்படுகின்றது.

அதன்படி விலைகள்தொடர்பிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, 20ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தப்படுவதற்கு தாங்கள் எதிர்ப்பு வெளியிடுவதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

20ஆவது சீர்திருத்தம் பகுதியளவில் திருத்தப்படுவதை எதிர்ப்பதாகவும் அதனை சீர்திருத்துவதானால் முழுமையாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கயிலாச யாத்திரை
## ஓர் அனுபவப் பகிர்வு 39
## பரமசாமி பஞ்சாட்சரம்

இந்த இடத்தில் இரு திபெத்தியர் பிரார்த்தனைக் கொடிகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

இந்த இடத்தின் புனிதத் தன்மையையும் மகத்துவத்தையும் சொல்ல வார்த்தைகள் கிடையாது. சிவனும் அம்மனும் இணைந்து அர்த்தநாரீஸ்வரராய்க் காட்சி தருவதனால் இந்த இடத்தின் புனிதத்தன்மையை விசேடமாகப் போற்றி வணங்குகிறார்கள்.

இந்த இடத்திற்கு நண்பர்களாக வருகின்றவர்களையும் இங்கு வந்து புதிய நட்பை ஏற்படுத்திக் கொள்பவர்களையும் இறைவன் சாட்சியாக இருந்து தெய்வீக பந்தத்தை ஏற்படுத்தி விடுகின்றனர். அதாவது குரு-சீடர், கணவன்-மனைவி, மகன்-தந்தை, இரு பாரிய சிநேகிதர்கள் போன்றவர்களுக்கான நல்ல உறவை மறு பிறப்புக்களிலாவது ஏற்படுத்தும். மேலும் இப் பந்தம் அவர்களுக்குள் அனைத்திற்கும் மேலான உன்னதமான, உயர்வான அன்பையும் நேசத்தையும் பாசத்தையும் ஏற்படுத்தும் என்பது ஞானிகளின் கூற்றாகும்.

ஒருவர் "டோல்மா பாஸ்" வந்தவுடன் அவருடைய சரீரம் தேவசரீரமாய் மாறுகின்றது என்று புராணங்கள் கூறுகின்றன. புத்த சமயத்தவர்கள் தங்கள் தெய்வமாகிய அவலோகேஸ்வரரும் பெண் தெய்வ மான தாராவும் இங்கு இருப்பதாக வணங்குகின்றார்கள். திபெத்தியர்கள் சிவனின் மறு பெயர் அவ லோகேஸ் வரர் என்றும் பார்வதியின் மறு பெயர் தாரா என்றும் கூறுகின்றனர்.

கல்லில் இருந்து கொண்டு எங்களுடன் வந்தவர்கள் யாராவது வருகின்றார்களா என்று பார்த்தேன். குழுவில் இருந்து ஒருவரையும் காணவில்லை. உதவியாளர் தலையை ஆட்டினார். "சரி போகலாமா" என்பது போல இருந்தது. நானும் எழுந்து நடைகோலைப் பாவித்துப் பாதையால் நடக்கத் தொடங்கினேன்.

இதைத்தான் மலை உச்சிப் பாதை என்றும் கற்க



ளுக்கூடாக நடக்கும் ஒற்றையடிப் பாதை என்றும் ஆபத்துக்கள் வரக்கூடிய பாதை என்றும் சொல்வார்கள். இறைவன் எங்களைப் காப்பாற்றிவிட்டான். அன்று புயல் இல்லை, கருமுகில் இல்லை, பனிமழை இல்லை, மேலே வெயில் கீழே பனி மட்டும்தான் என்பதை நினைத்துக் கொண்டு நடந்தேன்.

சற்றுத் தூரம் நடந்தபின் திரும்பிப் பார்த்தேன் திபெத்தியர்கள் "நமஸ்காரப் பரிக்கிரம" செய்வது தெரிந்தது. இவர்கள் ஒரு இடத்தில் எண்சாண் உடம்பும் மண்ணிற் பட நமஸ்காரம் செய்து, பின்பு மண்டியிட்டுத் தலை வணங்கி, எழுந்து, பின் அந்த இடத்தில் காலை வைத்து அடுத்த நமஸ்காரம் செய்வார்கள். அவர்களது உடல் இந்தக் குளிரான மலைப் பிரதேசத்திற்குப் பழக்கப்பட்டு விட்டது என்று நினைத்துக் கொண்டேன்.

எங்கள் கிரிவலத்தில் இப்போது இறக்கம் ஆரம்பிக்கத்தொடங்கியது. இறக்கத்தில் நடப்பதற்கு இரு கைகளுக்கும் ஊன்றுகோல்கள் தேவைப்பட்டன. என்னிடம் ஒரு ஊன்றுகோல் மட்டும் இருந்தது.

ஒரு கி.மீ தூரம் வரை பரந்து இருந்த பனிபடர்ந்த பாதையிற் பட்டுத் தெறிக்கும் சூரிய கதிர்கள் (பிரதிபிம்ப ஒளி) கண்களைத் தாக்கத் தொடங்கின. கண்களுக்கு ஆபத்து ஏற்படாமல் கண்ணாடி அணிந் திருந்தேன். சிலர் இந்த இடத்தில் கறுப்புக்கண் ணாடி (Sun glass) அணிந் திருந்தார்கள்.

பனி உறைந்த பாதையில் ஊன்றுகோல் இல்லாமல் சளைக்காமல் "ஓம் மணி பத்மே ஹூம்" என உச்சரித்துக் கொண்டு வரும் நேபாள பக்தர்களையும் பிரார்த்தனை மணியைச் சுற்றிக்கொண்டு இனிமையாகப் பாடிக் கொண்டு வரும் திபெத்திய பக்தர்களையும் காணக் கூடியதாக இருந்தது.

பனிப்பாறையைப் பொறுத்த வரை மற்றுமொரு அபாயம் என்னவென்றால் அதனைக் கடக்கும் போது உருகும் பனிக்கிடையில் கால் புதையக்கூடும் அல்லது பனிமேற் கால் சறுக்கக்கூடும். (தொடரும்)

# இரண்டு அதிகார மையங்கள் அரசை நடத்துவது சிரமம்

## புதிய அரசியலமைப்பு குழுத் தலைவர் லால் சுட்டிக்காட்டு

(கண்டி)


19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் என இரண்டு அதிகார மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், அரசாங்கத்தை கொண்டு நடத்துவது சிரமமானது என புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக மக்களின் கருத்துக்களை கேட்டறிய நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு பதிலாக புதிய அரசியலமைப்புச்சட்டம் இயற்றப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு சுயாதீன ஆணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டதால், ஓரளவுக்கு சமூகம் ஜனநாயகமயப்படுத்தப்பட்டுள்ளது.

19வது அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக ஒழித்து, நாடாளுமன்றத்திற்கும் பிரதமருக்கும் அதிகாரத்தை வழங்குவதற்கு பதிலாக நிறைவேற்று அதிகாரத்தில் ஒரு பகுதியை



மட்டும் நீக்கியதால், ஜனாதிபதி ஆட்சி முறையில் ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் மூலம் இரண்டு அதிகார மையங்கள் உருவாகின. இதனால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் சிரமமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிப்பது அவசியமானது எனவும் லால் விஜேநாயக்க தெரிவித்தார். (இ-7)

# ட்ரம்ப் தவறான கருத்துக்களை மக்களுக்கு வழங்க வேண்டாம்

## வடகொரிய ஜனாதிபதி எச்சரிக்கை

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், "தவறான கருத்துக்களை மக்களுக்கு வழங்கவேண்டாம்" என அமெரிக்காவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐ.நா. வடகொரியாவின் மீது பொருளாதாரத் தடைகள் மற்றும் அழுத்தங்களை விதித்துள்ளமையினால் வடகொரியாவிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 27 ஆம் திகதி வட கொரியா மற்றும் தென் கொரியா இடையிலான வரலாற்று ரீதியிலான சந்திப்பு ஒன்று இடம் பெற்ற போது வடகொரியா மற்றும் தென்கொரியா அணு சக்தி சோதனைகளை நிறுத்தவுள்ளதாகவும் மற்றும் சோதனைத் தளங்களை அப்புறப்படுத்தப் போவதாகவும் இணக்கம் கொண்டனர்.

இந்நிலையில் இன்னும் சில வாரங்களில் அமெரிக்க மற்றும் வடகொரிய ஜனாதிபதிகள் சந்திப்பு இடம்பெறவுள்ள நிலையில் ஊடகமொன்றிற்கு பேட்டியளித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகளும் அழுத்தங்களும் தொடர்ந்து பேணப்படும் எனவும் அவ்வாறான கடுமையான நடவடிக்கைகள் தான் இத்திருப்பு முனைக்கான காரணம் எனவும் இந்தத் தடைகளை நீக்கி முந்தைய தலைமைத்துவம் செய்த பிழைகளை செய்யமாட்டேன்" என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வடகொரியா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் மற்றும் அழுத்தங்களின் விளைவாக இரு கொரியாவிற்குமான சந்திப்பு இடம் பெறவில்லை எனவும் அவ்வாறாக மக்களுக்குத் தவறான கருத்துக்களை வழங்க வேண்டாம் எனவும் அமெரிக்காவை கிம் ஜாங் உன் எச்சரித்துள்ளதாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொரிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.(7)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1405

Search for people, places and things Nagendram Home


### கபிஷனா




### லக்ஷி




### அருண்




### கீர்த்திகா




### கஸ்தூரி




### சங்கீர்த்தனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோமாவிலிருந்த கோத்தபாய!

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க முன்னர் அரசியல் நிலைமையை ஆராய வேண்டும்

## அமைச்சர் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பது தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் நாட்டின் அரசியல் நிலைமை சம்பந்தமாக நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று முன்தினம் ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார். இதன் போது இலஞ்சம் பெற்றமை தொடர்பாக இரண்டு அரச உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட்ட விடயம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பொன்சேகா,

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தற்போதைய ஜனாதிபதியின் கீழ் நேரடியாக பணியாற்றும் அரச ஊழியர். மற்றைய அதிகாரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கு நெருக்கமான அரச அதிகாரி. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அருகிலேயே இருந்த அதிகாரியான லலித் வீரதுங்க சிறைக்கும் சென்றார்.

அரசியல்வாதிகளின் அருகில் புகுந்து கொண்டுள்ள அரச அதிகாரிகளே அதிகளவில் மோசடிகளிலும் கொள்ளைகளிலும் ஈடுபடுகின்றனர் என்பது இந்த கைதுகள் மூலம் உறுதியாகியுள்ளது. நாங்கள் தொடர்ந்தும் இதனை கூறிவந்தோம். கட்டாயம் இந்த பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும்.

இதற்கு முடிவுகாண மக்களும் தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷவுடன் இருப்பவர்களே 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக செயற்படுகின்றனர்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வந்தால் நல்லது. நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்று நாடு முழுவதும் கூறிச் செல்கிறார். இந்த இடத்தில்தான் சிக்கல் இருக்கின்றது. முதலில் அவர்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிக்க வேண்டும் என்ற ஐக்கிய தேசியக் கட்சி கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது. நாட்டின் அரசியல் நிலைமைகள் தொடர்பில் கவனமாக ஆராய்ந்த பின்னரே இது தொடர்பான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டு, மீண்டும் ஒரு மோசடியாளர் பிரதமராக பதவிக்கு வரும் வாய்ப்பிருந்தால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பது ஆபத்தாக அமையும்.

தவறுதலாக நடந்து முடிந்த தேர்தல் போன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அடுத்த தேர்தல்களில் தலை தூக்கினால், மோசடியாளர் நாட்டின் தலைவராக வருவதற்கு இடமுள்ளது.

அத்துடன் கோத்தபாய ராஜபக்ஷ நாட்டில் சட்டம் இல்லை. குரோதமும் பழி வாங்கலுமே இருப்பதாக கூறியுள்ளார்.

அவர் பதவியில் இருந்த போது அவர் மயானத்தில் தானே வாழ்ந்தார். அவரது காலத்தில் பழிவாங்கவி



ல்லை. வெள்ளை வானில் எவரையும் கடத்தவில்லை. அவர் அந்த காலத்தில் கோமாவில் இருந்துள்ளார். தற்போதுதான் அவருக்கு நினைவு திரும்பி அறிவு வர ஆரம்பித்துள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றியை பெறும்.

கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தி பார்க்கட்டும். அதன் பிறகு என்ன நடக்கும் என்பதை பார்த்துக்கொள்ளலாம்.

15 ஆண்டுகள் நாட்டில் இருக்காத ஒருவரை நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யும் அளவுக்கு நாட்டு மக்கள் முட்டாள் என்றால், அது குறித்து கவலையடைய நேரிடும்.

அவர் ஜனாதிபதியாக வருவதை முழு நாடும் எதிர்பார்த்துள்ளதாக கூறுகிறார். எந்த நாடு என்று தெரியவில்லை. அவர் அமெரிக்க பிரஜை. பிரஜாவுரிமையை பெறும் போது அமெரிக்காவின் இறையாண்மையை பாதுகாப்பதற்காக ஆயுதங்களை கையில் எடுக்க கடமைப்பட்டுள்ளதாக கூறி சத்தியம் செய்து உறுதி வழங்கியுள்ளார்.

அப்படியான நபருக்கு நாட்டின் தலைவர் பதவியை வழங்க எதிர்பார்த்துள்ள நாடு எது என்று தெரியவில்லை எனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (இ-7)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால் ஜனாதிபதி தேர்தலுக்கு பாதிப்பு வரும்

## அவசரம் வேண்டாம்; அமைச்சர் மனோ அறிவுரை



(கொழும்பு)

நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதி முறையை நீக்கினால் ஜனாதிபதி தேர்தலுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் தாம் அதற்கு இணங்க முடியாதென அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினரால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 20 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் கொழும்பில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது அவர் இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் அரசாங்கத்திற்கு விளங்காமை தொடர்பில் தன்னால் எதுவும் செய்ய முடியாது என தெரிவித்த அவர், தனக்கு அந்த விடயத்தில் தெளிவு உள்ளதாகவும் கூறினார்.

எனவே இந்த விடயம் தொடர்பில் அவசரப்பட வேண்டிய தேவை இல்லை.

இன்னும் சில வருடங்களின் பின்னர் இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கலாம் எனவும் மனோ கணேசன் தெரிவித்தார். (இ-7)

# அநாதைகளாக நிற்கின்றோம்!

# வடக்கில் எடுக்கும் முடிவுகளை கிழக்கில் அமுல்படுத்த முடியாது

## தமிழ்க்கூட்டமைப்பு எம்.பி. வியாழேந்திரன் எதிர்ப்பு

(ஏறாவூர்)

வடக்கு மாகாணத்தில் எடுக்கும் முடிவுகளை கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்த அனுமதிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - மண்முனைப்பற்று, புதுக்குடியிருப்பு பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டரங்கு திறப்பு விழாவும், விளையாட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் அனைவரும் தமிழர்களாவர். வடக்கு மாகாணத்தில் எடுக்கின்ற முடிவுகளை கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்த முடியாது. இங்கு தமிழ் மக்களோடு முஸ்லிம், சிங்கள மக்கள் இணைந்து வாழ்கின்றனர்.

வடக்கு மாகாணத்தில் எடுக்கப்படுகின்ற முடிவுகள் கிழக்கு மாகாண மக்களுக்கு நன்மைபயக்கின்றனவாக இருந்தால் மட்டுமே அவற்றை



கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் அனுமதிப்போம்.

ஏனெனில் இங்குள்ள எமது மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. கடந்த காலங்களில் நாங்கள் மாகாண சபைகளில் முதலமைச்சர் பதவியை கைப்பற்றவில்லை.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் பின்னடைவை சந்தித்திருக்கின்றோம். ஆகவே கிழக்கிலிருக்கின்ற தமிழ்த் தலைமைகளும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் ஒன்றிணைய வேண்டும்.

இல்லாவிட்டால் வரவிருக்கின்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழர்கள் ஆட்சியமைக்க முடியாது.

இதேவேளை தற்போது நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின்போது வடமாகாண அபிவிருத்திக்கு என தனியான அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் விஜயகலா மகேஸ்வரன் அமைச்சராகவுள்ள நிலையிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள போதிலும் கிழக்கு மாகாணத்தில் எவரும் இல்லாத நிலையே இருக்கின்றது.

இது மிகவும் வேதனையான விடயமாகும். இந்த மண்ணை நாங்கள் இழந்து விடுவோம். தமிழ் மக்களின் இருப்பினை இழந்து விடுவோம். கிழக்கு மாகாணத்திற்கு என ஒரு தமிழ் அமைச்சு உருவாக்கப்படவில்லை. நாங்கள் பிரதேசவாதம் பேசவில்லை.

ஈழ விடுதலை போராட்டத்தில் ஆயிரக்கணக்கான போராளிகளை அள்ளிக் கொடுத்த மாகாணம் கிழக்கு மாகாணம். வடக்கில் பல்வேறு போர்களை செய்த மாகாணம். ஆனால் இன்று நாங்கள் அநாதைகளாக நிற்கின்றோம் என தெரிவித்துள்ளார். (இ-7)

### அரசிலிருந்து விலகிய 16 பேரும்

# எங்கே போவது என்று இன்னும் தீர்மானமில்லை

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு தமக்கு இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லையெனவும், அதில் கலந்து கொள்வதற்கான தயார் நிலையில் தாம் இல்லையெனவும் அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேரில் ஒருவரான முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.



இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்வது தொடர்பிலும் இதுவரை இறுதித் தீர்மானங்கள் இல்லையென குறிப்பிட்டுள்ள அவர், தீர்மானம் எடுப்பதற்கு இன்னும் ஒருநாள் அவகாசம் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம நேற்று முன்தினம் தெரிவித்திருந்த கருத்துக் குறித்து அநுர பிரியதர்ஷன யாப்பா எம்.பியிடம் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேரும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்வதாக திலும் அமுனுகம நேற்று முன்தினம் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சு.கவின் மேலும் 10 உறுப்பினர்கள் மகிந்த அணியுடன் இணையத்திட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேலும் பத்து உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

நாடாளுமன்றின் இரண்டாம் அமர்வுகள் ஆரம்பமானதன் பின்னர், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இந்த விவாதம் நடத்தப்படும் தினத்தில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பத்து சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வார்கள் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் நாளை நாடாளுமன்ற அமர்வுகளின் ஆரம்பத்தில் எதிர்க் கட்சியில் அமர்ந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் அதிருப்தி கொண்டுள்ள பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து புதிய அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கமொன்றை அமைக்கும்முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. (இ-7)

# சு.க.-ஐ.ம.சு.முவில் அதிரடி மாற்றங்கள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் பொதுச் செயலாளர்கள் உட்பட கட்சிகளின் இதர பதவிகளில் அதிரடி மாற்றங்களைச் செய்ய இறுதி முடிவெடுக்கப்பட்டுள்ளது எனவும், எதிர்வரும் வாரம் இந்த மாற்றங்கள் இடம்பெறவுள்ளன எனவும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் வகையிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிருப்தியாளர்களைச் சமாளிக்கும் நோக்கிலும் இந்த மாற்றங்களை உடனடியாகச் செய்வதற்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைவரான மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

இந்த மாற்றத்தின் பிரகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி எஸ்.பி.திஸாநாயக்கவுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவி சுசில் பிரேமஜெயந்தவுக்கும் வழங்கப்படலாம் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் மகிந்த அணியால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர் என்பதுடன், தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்துவிட்டு தேசிய அரசிலிருந்து வெளியேறி எதிரணி வரிசையில் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ள சு.கவின் 16 பேர் கொண்ட அணியில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, சுசில் பிரேமஜெயந்த, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியில் முன்னர் இருந்தவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் பொதுச் செயலாளர்களாகத் தற்போது அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மற்றும் அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

இவர்களுக்கு எதிராக சு.கவின் அதிருப்தியாளர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பாணியில் சு.க. மற்றும் ஐ.ம.சு.முவை முழுமையாக மறுசீரமைக்க ஜனாதிபதி மைத்திரி தீர்மானித்துள்ளார் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

### ஜனாதிபதி வேட்பாளருக்கு ஏன் அவசரம்

# இல்லாத பிரச்சினைக்கு தீர்வு சொன்னால் புதிய பிரச்சினை உருவாகும்-கம்மன்பில

(கொழும்பு)

இல்லாத பிரச்சினையொன்றைத் தீர்க்கப் போய், புதிய பிரச்சினையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு நமக்கு எந்தவிதத் தேவையும் இல்லையென பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளர் குறித்து அவரிடம் வினவிய போதே இதனைக் கூறியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேட்பாளர் தொடர்பில் கருத்து முரண்பாடு நிலவுவதாக சிலர் காட்ட முயற்சிக்கின்றனர். எம்மிடம் கருத்து முரண்பாடு ஏற்படுவதற்கு ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வரவில்லை. அதற்கு இன்னும் காலம் இருக்கின்றது.

எமது அடுத்த கட்ட முக்கிய நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை நடத்தச் செய்து வெற்றி கொள்வதாகும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நேற்று அதிகாலை கொள்ளை

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் காலி - தெவட்ட பின்னதுவ நுழைவு வாயிலின் நுகதுவேயில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நேற்று அதிகாலை இவ்வாறு கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

முகத்தை மறைத்த நிலையில் வந்த கொள்ளையர்கள் கடமையில் இருந்த பணியாளர்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி அங்கிருந்த 38 ஆயிரம் ரூபாவை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## கபீர் ஹாஷிமுக்கு திடீர் சுகயீனம் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான கபீர் ஹாஷிம் திடீரென சுகயீனமுற்றுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் ஹாஷிம் அனுமதிக்கப்பட்டார். அவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும், அவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பார்வையிடச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## ஜே.வி.பியின் மே தினக்கூட்டம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் மே தின பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு பீ.ஆர்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சமூக நீதி - தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்பும் மக்கள் சார்பு ஆட்சி என்ற தலைப்பில் இந்த மே தின கூட்டம் நடைபெறவுள்ளது.மக்கள் விடுதலை முன்னணியின் மே தின ஊர்வலம் கொழும்பு கெம்பல் மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி பிற்பகல் 3 மணிக்கு பீ.ஆர்.சி.மைதானத்தை வந்தடையவுள்ளது.

இம்முறை பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தமது மே தின கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் மே தின கூட்டம் ஒன்றை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீண்டகால மின்னுற்பத்திக்கான கலப்பு முறை திட்டம் விரைவில்

(கொழும்பு)

நீண்டகால மின்னுற்பத்தி பயன்பாட்டிற்காக முன்னெடுக்கப்படவுள்ள கலப்புமுறை திட்டத்தை அமைச்சரவை அனுமதிக்காக எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


புதிய நிலக்கரி மின்னுற்பத்தி நிலையங்கள் உள்ளிட்ட திட்டங்கள் தொடர்பில், கடந்த வாரம் உயர் மட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றமைக்கமையவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, ஜனாதிபதி செயலாளர், மின்சாரத்துறை அமைச்சர், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினர் மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகள் ஆகியோர் குறித்த சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்படி, கலப்புமுறை மின்சார உற்பத்தி முறைமை அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வாய் பேச முடியாத, காது கேளாத இளைஞனுக்கு எமனாக வந்த ரயில்

(ஏறாவூர்)



மட்டக்களப்பு - கூழாவடி பகுதியில் ரயிலில் மோதுண்டு வாய்பேசமுடியாத இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் காலை வேளையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் இருதயபுரத்தினை சேர்ந்த 27 வயதுடைய உதயன் ஜீவேந்திரன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞருக்கு வாய் பேச முடியாத, காது கேளாத நிலையில் தண்டவாளத்தினூடாக நடந்து சென்ற போதே ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## கதை கேளு... கதை கேளு...

முன்னொரு காலத்தில், ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனிடம் பல அடிமைகள் இருந்தனர். அந்த அடிமைகளில் ஒருவன் மிகவும் அப்பாவி நோஞ்சானாகவும் இருந்தான். அவனை மற்ற அடிமைகள் நையாண்டி செய்வர். ஆனால், அந்த அப்பாவி அடிமை, யாருடனும் சண்டை போட மாட்டான்.


ஒரு சமயம், பணக்காரன், வியாபார விடயமாக நெடுந்தூரம் செல்ல வேண்டி இருந்தது. இன்றைய நாட்களைப் போல் போக்குவரத்துச் சௌகரியங்கள் கிடையாது. மூட்டைகளை, அடிமைகள்தான் சுமந்து செல்வர். ஆகவே, பணக்காரன் தன் அடிமைகளில், 20 பேரை தேர்ந்தெடுத்தான்.

"இந்தப் பயணம் பல நாட்கள் நீடிக்கும். ஒவ்வொருவரும், ஒவ்வொரு மூட்டையை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும். நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் மூட்டையை எக்காரணங் கொண்டும் வழியில் மாற்றிக் கொள்ளக் கூடாது. இதோ, 20 மூட்டைகள் உள்ளன. அவரவர் விரும்பியதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று ஆணையிட்டான் பணக்காரன்.

உடனே, அடிமைகளிடையே பெரிய அடிதடியே ஏற்பட்டது. ஒவ்வொருவரும் மிகச் சிறிய மூட்டையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காக, முட்டி மோதிக் கொண்டனர். இவர்களுடைய போட்டா போட்டியில், நோஞ்சான் அடிமை மட்டும் கலந்து கொள்ளவில்லை. ஒதுங்கி ஓரமாக நின்றான்.

எல்லோரும் அவரவர்களுடைய மூட்டையைப் எடுத்ததும், அந்தச் சின்ன அடிமை மெல்ல நகர்ந்தான். அங்கு மிஞ்சி இருந்தது ஒரே ஒரு மூட்டைதான். ஆனால், அது தான் அங்கிருந்த மூட்டைகளிலேயே மிகப் பெரியது.

அந்த அப்பாவி அடிமையை விடப் பெரிதாக இருந்தது அது. தனக்கு இத்தனை பெரிய மூட்



டையை அவர்கள் விட்டு வைத்ததற்காக அவன் ஆத்திரப்படவில்லை. அலுத்துக் கொள்ளவும் இல்லை. மௌனமாக அதைத் தூக்கித் தலையில் வைத்து, தன் சகாக்களைத் தொடர்ந்தான். அதைக் கண்ட மற்ற அடிமைகள் உரக்கச் சிரித்தனர்.

"உன்னைப் போல் அடி முட்டாளைப் பார்த்ததே இல்லை. மிகப் பெரிய மூட்டையை எடுத்திருக்கிறாயே... பயணம் முழுவதும் நீ இத்தனை பெரிய மூட்டையை எப்படிச் சுமந்து வரப்போகிறாய்? மடையன்!" என்று கேலியாக நகைத்தனர்.

மூட்டையின் கனம் அழுத்த தள்ளாடியபடி நடந்த சின்ன அடிமை, புன்முறுவலுடன் கூறினான்.

"இந்த மூட்டையையும் யாரேனும் ஒருவர் தூக்கித் தானே ஆக வேண்டும்? தவிர இந்த மூட்டைக்கு ஒரு மாய சக்தி உண்டு. "இதை முதலிலேயே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளாமல் போனோமே, என்று நீங்கள் பின்னால் வருத்தப்பட்டாலும் படலாம்... யார் கண்டனர்?" என்றான்.

இதைக் கேட்ட, 19 அடிமைகளும் சிரித்தனர்.

"அப்படி வேறு நீ கனவு காண வேண்டாம். அசட்டுப் பயலே! நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்கு ஏற்ற சரியான மூட்டையைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம்" என்று பரிகசித்தனர்.

நோஞ்சான் அடிமை பதில் ஒன்றும் சொல்லவில்லை.

நாட்கள் நகர்ந்தன...

பயணம் நீண்டு கொண்டே போயிற்று. கரடுமுரடான மலைப் பாதைகளில், நோஞ்சான் அடிமையின் பெரிய மூட்டையில் ஏற்படும் வினோதமான மாறுதலை மற்ற அடிமைகள் கவனித்தனர். அந்த நோஞ்சான் அடிமை கூறியதுதான் உண்மை! அந்தப் பெரிய மூட்டை நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே வருகிறதே! உண்மையிலேயே அது மாய சக்தி வாய்ந்தது தானோ?

நாளாக நாளாக, அது பருமனைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, மற்றவர்களின் மூட்டைகளை விடச் சின்னதாகிவிட்டது.

உடல் வலிமையிலும், உருவத்திலும் பெரியவர்களாக இருந்த சோம்பேறி அடிமைகள் அப்போதுதான் தாங்கள் எத்தனை பெரிய முட்டாள்கள் என்பதை புரிந்து கொண்டனர்.

தொடரும்....




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1697-சுவீடனில் ஸ்டொக்ஹோம் நகரின் பழம்பெரும் அரச மாளிகை தீயில் அழிந்தது.
- 1915-முதலாம் உலகப் போர்: ஜெர்மனியின் யூ-20 நீர்மூழ்கிக் கப்பல் பிரித்தானியாவின் லூசித்தானியா என்ற ஆடம்பரக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்ததில் 1,198 பேர் கொல்லப்பட்டனர்.
- 1946-சோனி நிறுவனம் 20 தொழிலாளர்களுடன் டோக்கியோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948-ஐரோப்பியப் பேரவை உருவாக்கப்பட்டது.
- 1954-வியட்நாமில் 'தியன் பியன் பு' சமரின் போது பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டது.
- 2007-முன்னர் இந்தியாவுடன் இணைந்திருந்த சிறிய கண்டம் ஒன்று தெற்குக் கடல்களின் அடியில் தமது ஆய்வுக் கப்பலான போலார்ஸ்டேர்ன் (the Polarstern), கண்டுபிடித்துள்ளதாக ஜெர்மனிய அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### பிறப்புகள்

- 1861-இரவீந்திரநாத் தாகூர், நோபல் பரிசு பெற்ற இந்திய எழுத்தாளர், கவிஞர் (இ. 1941)
- 1880-பாண்டுரங்க வாமன் காணே, இந்திய இந்தியவியலாளர், சமஸ்கிருத அறிஞர் (இ. 1972)
- 1883-தமிழ்வேள் உமாமகேசுவரனார், தமிழகத் தமிழறிஞர் (இ. 1941)
- 1901-கேரி கூப்பர், அமெரிக்க நடிகர் (இ. 1961)
- 1919-இவா பெரோன், அர்ச்செந்தீன நடிகை (இ. 1952)
- 1927-ரூத் பிராவர் ஜாப்வாலா, செருமானிய-அமெரிக்க எழுத்தாளர் (இ. 2013)
- 1935-அ.மா.சாமி, தமிழக எழுத்தாளர், இதழாளர், நூலாசிரியர்
- 1949-சு.திருநாவுக்கரசர், தமிழக அரசியல்வாதி
- 1968-கிருஷ்ணா டாவின்சி, தமிழக எழுத்தாளர், இதழாளர் (இ. 2012)
- 1971-தாமசு பிக்கெட்டி, பிரான்சிய பொருளியலாளர்
- 1989-அதர்வா, தமிழகத் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 1617-டேவிட் பாப்ரிசியசு, செருமானிய வானியலாளர், இறையியலாளர் (பி. 1564)
- 1825-அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையமைப்பாளர் (பி. 1750)
- 1964-பி. கண்ணாம்பா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி. 1910)
- 1990-சாம் தம்பிமுத்து, இலங்கை அரசியல்வாதி (பி. 1932)
- 2011-வில்லார்டு பாயில், நோபல் பரிசு பெற்ற கனடிய இயற்பியலாளர் (பி. 1924)
- 2015-அமலெந்து குகா, இந்திய வரலாற்றாசிரியர், கல்வியாளர், நூலாசிரியர் (பி. 1924)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 75 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 50 | 40 | 80 | 50 |
| தக்காளி | 100 | 80 | 40 | 50 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 30 | 40 | 35 |
| கோவா | 50 | 60 | 40 | 30 | 80 | 30 |
| கரட் | 100 | 100 | 100 | 80 | 160 | 100 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 40 |
| புடோல் | 80 | 60 | 60 | 30 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 35 | 40 | 35 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 180 | 150 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 68 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 80 | 100 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 40 | 120 | 100 |
| வற்றாளைக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 220 | 120 | 240 | 200 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 30 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 100 | 60 | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 100 | 160 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 200 | — | 200 | 200 |
| கத்தரிப்புள்ளா | 60 | 30 | — | — | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 25-35 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | 140 | — | 120 | 180 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 25 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 35 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — |

சிக்கனம் – அதுவும் ஒருவித வருமானமே

– ஸெனிக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மறுசீரமைக்கப்பட வேண்டிய வடபுலத்தின் பொருளாதாரம்

வடபுலத்தின் பொருளாதாரம் குறித்த வாதப் பிரதிவாதங்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

பொதுவில் வர்த்தகத்துறையினர் வருமான வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றனர் என்ற கருத்து பலமாகியுள்ளது. இதனை ஏற்றுக் கொள்வதும் தவிர்க்க முடியாததே.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மிகமோசமான வருமான வீழ்ச்சியைச் சந்தித்த வடபுலத்து வர்த்தகர்களில் கணிசமானவர்கள் தமது தொழிற்றுறையை விட்டு விலகினர்.

இன்னும் சிலர் கடன் சுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர். மேலும் சிலர் கண்காணாத தேசத்துக்கு தப்பிச் சென்றனர்.

திரும்பிய காசோலைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென்றே பொலிஸ் நிலையங்களில் தனியான பிரிவுகள் இயங்க வேண்டி இருந்தது.

அந்த நிலைமை ஒரு மாதிரியாகச் சமாளிக்கப்பட்டது என்றால், மீண்டும் சுனாமி போல வடபுலத்து வர்த்தகத்துறையினரின் பொருளாதாரம் சடுதியாக வீழ்ச்சியடைகிறது என்பதை பலரும் சுட்டிக் காட்டுகின்றனர். இதனை அவதானிக்கவும் முடிகின்றது.

யாரைப் பார்த்தாலும் வியாபாரம் மந்தம்; கடன் சுமைகளை அடைக்க முடியவில்லை; வர்த்தகத் துறை சார்ந்த கொடுக்கல் வாங்கல்களில் நம்பகத்தன்மை அறவே இழந்து போயிற்று; வங்கிச் செயற்பாடுகள் கூட, பணம் இன்றி திருப்பப்படும் காசோலைகளால் வடபுலத்து வர்த்தகத் துறையில் தனது வகிபங்கை செம்மையாக்ச் செய்ய முடியாத நிலைமைக்குட்பட்டுள்ளது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் திரவப் பணத்துக்கான கொடுக்கல் வாங்கல் மட்டுமே நடக்க வேண்டும் என்பதாக நிலைமை மாறியுள்ளது. இவை பற்றி பொருளாதார நிபுணத்துவம் சார்ந்தவர்களும் வங்கித்துறை மற்றும் வர்த்தக சங்கங்களும் ஒன்றுகூடி ஆராய்வது அவசியம்.

எங்கு பார்த்தாலும் வர்த்தக நிலையங்களைக் கட்டுதல் என்பதே வடக்கின் தொழில் துறை என்றாயிற்று.

விவசாய உற்பத்தி முயற்சிகளுக்கான முதலீடுகள் கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ளன. விவசாய உற்பத்திக்கான முதலீடு என்பது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்கின்ற வர்த்தகர்களுக்கு தாம் மாரடித்துக் கொடுப்பதாகவே இருக்கின்றது என்கின்றனர் வேளாண் விவசாயிகள்.

அதாவது சந்தையில் விவசாய உற்பத்திப் பொருட்கள் விற்பனையாகின்ற விலையில், நாற்பது சதவீதமான விலைப் பெறுமதி மட்டுமே தமக்குக் கிடைப்பதாகவும் விவசாய உள்ளீட்டு பொருட்களின் விலை உச்சமாக இருப்பதாகவும் விவசாயிகள் தமது தரப்புப் பிரச்சினையை முன்வைக்கின்றனர்.

நிலைமை இதுவாக இருந்தால், விவசாயம் செய்யாமல் வீட்டில் இருப்பது, வீட்டில் இருக்கின்ற மிச்ச சொச்சத்தையாவது பாதுகாக்க முடியும் என்ற கருத்தை விவசாயப் பெருமக்கள் கொண்டுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, கடற்றொழில் மூலம் கிடைக்கின்ற கடலுணவை கொள்வனவு செய்வதற்காக உள்ளூரில் ஏகப்பட்ட பணத்தை செலவிட வேண்டியுள்ளது என்ற நுகர்வோர் கருத்தும் இங்கு நோக்குதற்குரியது.

அதாவது ஏற்றுமதி செய்தல், பதனிடல் என்ற வகையில் எங்கள் கடல் வளத்தில் பெறப்படும் பெரும் மீன், நண்டு, இறால், கணவாய், சுறா என்பன ஒட்டுமொத்தமாக ஏற்றுமதியாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஏற்றுமதியின் பொருட்டு அவர்கள் கடலுணவுக்கு அதிக விலை கொடுக்க, உள்ளூர் நுகர்வோர் என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழுகிறது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் வடபுலத்தின் பொருளாதாரப் போக்கு சீரமைக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனைச் செய்வதற்கு அனைவரும் முன்வருவதும் ஒத்துழைப்பதும் அவசியமாகும்.

# கிழக்கின் அபிவிருத்தியை அரசு புறக்கணிக்கின்றதா?

## முன்னாள் முதலமைச்சர் கேள்வி

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தை அங்குள்ள வளங்களைக் கொண்டே அபிவிருத்தி செய்யக்கூடிய நிலையிருந்தும் அரசாங்கம் அதனைக் கருத்திற் கொள்ளாதிருப்பது கிழக்கைப் புறக்கணிப்பதாக அமைவதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் குற்றம் சாட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிக்கையொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது, "கிழக்கில் எனது ஆட்சி நிலவிய போது, கிழக்கிலுள்ள உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி மாகாணம் முழுவதையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் சாத்தியமான வள ஆய்வுகளைச் செய்து அறிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பித்தோம்.

பல முன்மொழிவுகளைச் செய்தோம். ஆனால் அவை எதுவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

நான் மேற்கொண்ட செயற்திறன் மிக்க திட்ட முன்மொழிவுகளும், அபிவிருத்திகளும், இனம், மதம், மொழி சார்ந்து ஒருபோதும் இருந்ததில்லை.

குறிப்பாக மூவினத்தவர்களுக்கும் பயன்தரத்தக்கதாக கிழக்கு மாகாணத்தில் 3 தொழிற்பேட்டைகளின் மூலம் பல்லாயிரக்கணக்கானோருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு வழங்கும் விதமாக குறித்த திட்டம் இருந்தது.

அத்துடன் மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரைக்கும் புகையிரதப் பாதையை விஸ்தரித்தல், பொத்துவில் தொடக்கம் மட்டக்களப்பு ஊடான கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை அதிவேக நெடுஞ்சாலை, உல்லாசத்திற்காக கிழக்குக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கும், உள்ளூர் பயணிகளுக்கும், வசதியளிக்கும் வகையில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை, பொத்துவில் ஆகிய இடங்களில் விமான நிலைய அபிவிருத்தித் திட்டங்கள் என்பன என்னால் முன்மொழியப்பட்டவற்றில் சிலவாகும்.

இந்த விடயங்கள் கரிசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. அத்துடன் வளப்பங்கீடு இடம்பெறுவதோடு தேசிய உற்பத்தியிலும் கிழக்கு மாகாணம் கணிசமான பங்களிப்பைச் செலுத்த முடியும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## பிரதமர் பதவி தொடர்பில் 20வது ஊடாக மாற்றுவழி

### ஜே.வி.பி. எதிர்பார்ப்பு

(கொழும்பு)

பிரதமர் பதவி தொடர்பில் 20வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக மாற்று வழி இரண்டினை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

பிரதமர் தெரிவு குறித்து எந்தக் கட்சிகளாவது நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அதற்கு இரண்டு யோசனைகளை தமது கட்சி முன்வைக்கும்.

குறித்த ஒரு கட்சி பிரதமராக ஒருவரைத் தெரிவு செய்தால் அவர் 50 சதவீதமான வாக்குகளை பெற்றிருக்க வேண்டும்.

அவரை ஜனாதிபதி பிரதமர் பதவிக்கான வேட்பாளராக ஏற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறில்லாவிடின், அவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டும்.

இந்த இரண்டு யோசனைகளையும் ஜே.வி.பி. தமது சார்பில் முன்வைப்பதாக விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### தன்மைகள் அடிப்படையில் தானம் எத்தனை வகைப்படும்?

அதன் தன்மைகளைப் பொறுத்து தானம் மூன்று வகைப்படும். அவை சாத்வீக தானம், அரச தானம், துஷ்டதானம் ஆகும்.

இந்தத் தானத்தைச் செய்ய வேண்டியது எனது கடமையாகும் என்ற எண்ணத்துடன் உரிய காலத்தில் முழு மனதுடன் செய்யப்படும் தானம் சாத்வீகதானம் ஆகும்.

எங்கு, எந்த நேரத்தில் யாருக்குத் தானம் கொடுப்பது என்பதை அறிந்து தானம் கொடுக்க வேண்டும். வெள்ளப் பெருக்கு, பூகம்பம், புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள், நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், கடும் வறுமையில் வாடுபவர்கள் போன்றவர்களுக்குச் செய்யும் தானம் சாத்வீக தானமாகும்.

பிரதிபலனை எதிர்பார்த்து அரைகுறை மனதுடன் செய்யப்படும் தானம் தானத்தில் சேராது. அவ்வாறு செய்தால் தானத்தின் புண்ணியம் நமக்கு கிடைக்காது. புகழுக்காகவும் மற்றவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவும் செய்யும் தானமும் புண்ணியம் செய்யாது. பூஜைக்காலங்களில் செய்யப்படும் அன்னதானமும் வஸ்திரதானமும் திரவிய தானமும் புண்ணிய கருமங்களாகும். இவை மட்டுமல்லாமல் பசு தானம் போன்றவையும் புண்ணிய கர்மங்களாகும்.

சில கால கட்டங்களில் மனிதர்கள் ஒன்றிணைந்து தங்களது ஊருக்காகவோ, ஊர் மக்களுக்காகவோ கூலி எதுவும் வாங்காமல் வேலை செய்யும் பழக்கம் இப்போதும் வழக்கத்தில் உள்ளது. இது உழைப்பு தானம் ஆகும். உழைப்பு தானத்திற்கும் புண்ணியம் கிடைக்கும்.

எவ்வித சஞ்சலமுமின்றி மகிழ்ச்சியுடன் பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யப்படும் எந்தத் தானமும் புண்ணியமாகும். அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். தேவையான நேரத்தில் தேவைக்கேற்றவாறு தானம் செய்தால் அதிக பலன் கிடைக்கும். (தொடரும்)

## மத்திய வங்கியின் கீழ் சமுர்த்தி வங்கி – ரணில்

சமுர்த்தி வங்கியை இலங்கை மத்திய வங்கியின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த ஐக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், மணிப்புரம் கிராமம், சுந்தரபுரம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** முருங் கனியிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன் பிட்டி, ஆத்திகுளி, செம்மண் தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம, முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ, தலைமன்னார் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



### இனிமையான வாழ்வுக்கு இன்றியமையாத சாதனம்

மனித வாழ்வுக்கு இறையுணர்வு மிகவும் அவசியமானது. இறையுணர்வு என்பது நம்பிக்கை. அது என்ன நம்பிக்கை (Faith) என்றால் "ஒரு பெரிய சக்தியானது பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது அது என்னுள்ளும் இருக்கத்தான் வேண்டும் நான் பிறப்பதற்கு முன்னேயும் இருந்தது. எனக்குப் பின்னாலேயும் இருக்கும்.

அந்தச் சக்தி முன்னும் பின்னுமாக எல்லா இயக்கங்களையும் இயக்கிக் கொண்டிருக்கின்றது. இப்பொழுதும் எப்பொழுதும் அது ஊடுருவி நிறைந்து இயங்கிக் கொண்டுதானே இருக்கும்" - இவ்வாறு நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி முழுமையாக இருக்கிறது என்ற ஒரு நம்பிக்கையின் மேல் செயல்களை ஒழுங்கு செய்து கொள்வதுதான் "மதம்" (Religion) என்பதாகும்.

அதற்கும் மேலாக எவ்வாறு அந்தப் பரம்பொருள் நிறைந்த ஒன்று, மாறாத ஒன்று, எல்லாவற்றையும் சரியாக இயக்கிக் கொண்டிருக்கிறது. அது நமக்குள்ளாக எப்படி இயங்கிக் கொண்டு இருக்கிறது. நாமாக எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அறிந்து, அதிலேயே உறைந்து, அதுவே நானாக, நானே அதுவாக இருப்பது தான் "ஞானம்".

# உலக காசநோய் விழிப்புணர்வு துடுப்பாட்டம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி சம்பியன்




யாழ்ப்பாணம்மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தினரால் உலக காசநோய் தினம் 2018 ஐ முன்னிட்டு காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யாழ் மாவட்டக் கழகங்கள், திணைக் களக் கழகங்களிடையே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 9 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ் கரோதய சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் சமுதாய வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. இரட்ண சபாபதிப் பிள்ளை கேசவனும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. கனகராஜா நந்தகுமாரனும் கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தனர். இறுதிப்போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வண்ணார்பண்ணை ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் வண்ணார்பண்ணை ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியை 19 ஓட்டங்களினால் வென்று சம்பியனாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அபி அணிக்காக ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். 71 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 5.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியை தழுவிக் கொண்டது. ஆணியின் சகல துறை ஆட்டக்காரர் சுசீந்திரன் 6 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த போதும் மற்றையவீரர்களால் வெற்றியைப் பெற முடிய வில்லை.

ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணிவீரர் சிந்து 2 பந்துப் பரிமாற்றங்களில் 9 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 இலக்குகளைக் கைப்பற்றி வெற்றிக்கு வழி வகுத்தார். (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III பரீஸ் அணி 151 ஓட்டங்களால் வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் வரிசையில் மானிப்பாய் பரீஸ் அணி டிறிபேக்ஸ் ரார் அணியை 151 ஓட்டங்களால் வெற்றி பெற்று தங்களது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 50 ஓவர்களில் 09 இலக்குகளை இழந்து 341 ஓட்டங்களை பெற்றது. கிஸோக்குமார்-98, சுஜீவன்-28, சபேசன்-33, சுபாஸ்கரன்-19, சுபேந்திரன்-44, பானுஸன் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களை பெற்றுள்ளனர். களத்தடுப்பில் சுகந்தன், சங்கீதன், மார்க்சிஸ், பார்த்தீபன், கஜின்தன் தலா-01 இலக்கினையும் தசின்தன், நிலக்ஸன் தலா-02 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறிபேக்ஸ்ரார் அணி 39.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 190 ஓட்டங்களை பெற்றது. பிரவீன்-18, பதுமன்-26, பிரதீபன்-66, வக்ஸன்-25, சஜின்தன்-15 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் கிஸோக்குமார்-03, சுபாஸ்கரன்-01, யாழினி-02, அனோஜன்-01, விநோத்-01, சேந்தன்-02 இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் தர வரிசைப் பட்டியலுக்கு மானிப்பாய் பரீஸ் அணி 10.92 புள்ளிகளையும் டிறிபேக் ஸ்ரார் அணி 2.80 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (க)



# உதயசூரியனின் கிண்ணம் கல்வியங்காடு ஜி.பி.எஸ்.வசம்



சுன்னாகம் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் மென்பந்து சுற்றுத் தொடரினை கல்வியங்காடு ஜி.பி.எஸ். அணி கைப்பற்றியது.

இறுதிப் போட்டியில் ஜி.பி.எஸ்.அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோறியா விளையாடியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோ்றிய அணி 6 ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

59 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜி.பி.எஸ். அணியை சுரேஷ் தனது அதிரடி துடுப்பாட்டம் மூலம் வெற்றிக்கு இட்டுச் சென்றனர்.

அணித் தலைவர் கிருபாகரன் இறுதியில் தொடர்ந்து இரு சிக்ஸர்கள் விளாச அணி வெற்றியை தொடர்ந்தது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சுரேஷ் தெரிவு செய்யப்பட்டார். (க)





தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறும். காலிறுதி முதலாவது போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் குப்பிளான் குறிச்சிக்குமரன் அணியும் இரண்டாம் காலிறுதிப் போட்டியில் இளவாலை யாங்ஹென்றிஸ் பலாலி விண்மீன் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (க)






பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 19 கிராமசேவை அலுவலர் பிரிவை உள்ளடக்கிய பூநகரி பிரதேச விளை யாட்டு விழா கடந்த 3 ஆம் திகதி பூநகரி சிறி விக்கி னேஸ்வரா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் தடகள விளையாட்டுப் போட்டிகளும் பெருவிளையாட்டுக்களும் இடம்பெற்றன. பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். 14 விளையாட்டுக்கழக அணிகள் இப்போட்டியில் பங்கு கொண்ட நிலையில் இரணைமாதா நகர் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் 48 புள்ளிகளைப் பெற்று பிரதேச சம்பியன் அணியாக தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அரச அதிபரிடமிருந்து பிரதேச சம்பியன் அணி வெற்றிக்கண் ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். (க-84)

## கூட்டு எதிர்க்கட்சியின்...

தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

அதன்பின்னர், கட்சியினால் குறித்த வேட்பாளர் அங்கீகரிக்கப்படுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேபோல், இன்று காலி முகத்திடலில் இடம்பெறவுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் மே தின பேரணியில் கடந்த வருடம் போன்று இம்முறையும் பெருந்திரளான மக்கள் கலந்து கொள்வார்கள் என தான் நம்புவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம)

## வலி.வடக்கில் வளம்...

காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் மீள்குடியேற்றத்தில் இன்னும் பல செய்ய வேண்டியுள்ளது. குறிப்பாக இராணுவத்தினர் இன்னும் முக்கியமான வளமான பகுதிகளைத் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். மக்களின் வீடுகள் இடிக்கப்பட்டு அதில் புதிய கட்டடங்கள் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான கட்டடங்களை இடிக்காமல் அதை அவ்வாறே நிர்வகிப்பமை தொடர்பிலும் ஆராயவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வலி. வடக்கில் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் காணிகளில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை சுற்றுலாத் துறைக்கு பயன்படுத்திக் கொண்டு, மக்களுக்கு வேறு இடங்களை வழங்க முடியுமா? என்பது தொடர்பில் ஆராயப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்வதற்கு இன்னும் எத்தனையோ வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளன.

பற்றைகள் அழிக்கப்படவேண்டும், ஒவ்வொருவருடைய காணி எங்கே இருந்தது, வீடு எங்கே இருந்தது என நிர்ணயித்து வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும். மக்களுக்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாம் பல வற்றை ஆராய்ந்துள்ளோம்.

இராணுவம் தொடர்ந்தும் காணிகளை வைத்திருப்பது எமக்கு மனவருத்தத்தைத் தருகின்றது. விடுவிக்கப்பட்ட இடங்கள் என்பது சிறிய பகுதி. ஏனையவை மிகவும் வளர்ச்சி தரக்கூடிய மண் வளமுடைய பகுதிகளை இராணுவம் ஆக்கிரமித்துவைத்துள்ளது.

இவை சம்பந்தமாக உரியவர்களுடன் பேசி, ஏனைய பகுதிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது வடக்கு மாகாணத்துக்கு என அமைச்சராக சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் பேசி முடியுமானவரை கூடியவிரைவில் நடவடிக்கை எடுக்க முயற்சிப்பேன்.

போர் நிறைவடைந்ததன் பின்னர் மக்களுடைய வீடுகள் எல்லாம் தரைமட்டமாக்கி, அங்கு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய கட்டடங்களை இடித்துவிட்டு காணி உரிமையாளருக்கு வீடு கட்டி வழங்குவதா? அல்லது அந்தக் கட்டடங்களை சபை ஒன்றின் கீழ் சுற்றுலா துறைக்கு பயன்படுத்திக் கொண்டு மக்களுக்கு வேறு இடத்தை வழங்க முடியுமா? என்பது தொடர்பில் நான் ஆராய்கின்றேன்.

கூடிய விரைவில் உரியவர்களுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருவேன் என்றார். (ம-ஒ)

## இனப்பிரச்சினை...

பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகளுக்குள்ளே அடிபட்டுக் கொண்டிருக்கின்றோம். இதனால் மக்கள் வெறுப்படைந்து எங்களிடமிருந்து விலகிவிடுவர்.

இவ்வாறு ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற பிரதிக் குழுக்களின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ரெலோ நிறுவுநர் சிறி சபாரத்தினத்தின் 32ஆவது நினைவு தினம் நேற்று கோண்டாவிலில் நினைவுகூரப்பட்டது. அதில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சகோதரப் படுகொலை தொடர்பில் இப்போதும் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. துப்பாக்கி முனையிலே சுடுவதுதான் சகோதரப் படுகொலையல்ல. தமிழ் கட்சிகள் மாறி மாறி கட்சிகளைக் குற்றஞ்சுமத்துவது என்பதும் சகோதரப் படுகொலைக்கு சமமான தேயாகும்.

தென்னிலங்கையைப் பார்க்கின்ற போது, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான முரண்பாடுகள் பெரியளவில் இருப்பதாக வெளியிலே சொல்லப்பட்டாலும்கூட அவர்கள் இருவரும் ஏதோவொரு வகையில் ஒன்றிணைந்திருக்கிறார்கள்.

ஆனால் எங்களுக்குள்ளே தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு என்ற நோக்கத்தில் பல தமிழ் கட்சிகள் முன்வந்துள்ள போதும் எங்களுக்குள்ளே விமர்சனங்களைத் தெரிவித்து அடிபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இதனால் தமிழ் மக்கள் என்ன செய்வது என்ற கேள்விக்குறியுடன் உள்ளனர். இதனால் தமிழ் மக்கள் கடந்த தேர்தலிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சிகளுக்கு மாறி மாறி வாக்களித்துள்ளார்கள்.

அதனால் தென்னிலங்கைக் கட்சிகளான யானையும் கையும் வடக்கு-கிழக்கில் காலூன்றி உள்ளன. மக்களுடைய விரக்திதான் இந்த சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளது.

எனவே எமது மக்களின் விடுதலை தொடர்பில் எங்களுக்குள் ஒற்றுமையைக் கொண்டுவரவேண்டும். மாறாக மோதிக் கொண்டிருப்போமேயானால் மக்கள் எம்மை ஆதரிப்பதிலிருந்து விலக வாய்ப்பு உள்ளது என்றார். (ம)

## ஜூன் முதல் வரிச் சலுகை...

களம் தெரிவித்துள்ளது.

பெறுமதி சேர் வரி மீளப்பெறும் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் நாயகம் நடுன் குருகேயை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகையான சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் கொள்வனவு செய்த பொருள்களுக்கான பற்றுச்சீட்டை கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் சமர்ப்பித்தால் பொருள்கள் மீது அறவிடப்பட்ட 15 சதவீத பெறுமதி சேர் வரி மீளச் செலுத்தப்படும்.

சுற்றுலா பயணிகளுக்கு ஆடைகள், மின் உபகரணங்கள் மற்றும் இறக்குமதிப் பொருள்கள் எங்கே கிடைக்கும் என்ற தகவலை வழங்கவேண்டும்.

தற்போது பெறுமதி சேர் வரி மீளப் பெறும் திட்டம் கைமுறையாகவே அறிமுகப்படுத்தப்படுகிறது. ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குள் இந்த திட்டம் சிங்கப்பூர் போன்று தானியங்கித் திட்டத்துக்குள் மாற்றப்படும்" என்று இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் நாயகம் நடுன் குருகே தெரிவித்தார். (ம)

## உதவியை பெற அரசு...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு மீள்குடியேற்ற பகுதியை நேற்று ஞாயிற்றுக்கிழமை சென்று பார்வையிட்ட வடக்கு முதல்வர், அதன் பின்னர் செய்தியாளர்களிடம் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியுடன் இவ்விடயம் தொடர்பாக தான் கதைத்ததாகவும், அவரும் இதுகுறித்து புரிந்துகொண்ட போதிலும், அதனை செயற்படுத்த முடியாமைக்கு அரசியல் ரீதியான காரணங்கள் இருக்கலாமென விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

இதேவேளை, வலி. வடக்கில் சிறிய தொரு பகுதியிலேயே இராணுவம் நிலைகொண்டுள்ளதென சுட்டிக்காட்டிய விக்னேஸ்வரன், எனினும் அவர்கள் மக்களின் விளைநிலங்கள், பயன்தரு மரங்கள் கொண்ட காணிகளை பிடித்து வைத்திருப்பதாக சுட்டிக்காட்டினார். காணிகளை இவ்வாறு தொடர்ந்தும் இராணுவம் கையகப்படுத்தி வைத்திருப்பது வேதனையான விடயம் என்றும், அவற்றை விடுவிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

# வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 கறவைப் பசுக்களை காணவில்லை

## ஆங்கில ஊடகம் செய்தி

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 கறவைப் பசுக்களை காணவில்லை என கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டுக்கு 20 ஆயிரம் கறவைப் பசுக்களை இறக்குதி செய்யும் திட்டத்தில் முதல் கட்டமாக 2017ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி 20 கறவைப் பசுக்கள் தருவிக்கப்பட்டன.

அவை ஒவ்வொன்றின் விலை 5 இலட்சத்து 21 ஆயிரத்து 551 ரூபாயாகும். 20 பசுக்களின் விலையும் ஒரு கோடியே 4 இலட்சத்து 31 ஆயிரத்து 20 ரூபாயாகும்.

20 கறவைப் பசுக்களும் பேராதனை கால்நடை ஆராய்ச்சி நிலையத்துக்கு வழங்கப்பட்டன. அவை தற்போது காணாமல் போயுள்ளன என்று கணக்காய்வுத் தகவலில் தெரியவந்துள்ளது. (ம)

# வவுனியா வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று மூடப்படும்

## வர்த்தக சங்கம் அறிவிப்பு

(வவுனியா)

மே தினத்தினை இன்று 7ஆம் திகதி அரசாங்கம் அனுஷ்டிக்குமாறு தெரிவித்துள்ள நிலையில் இன்றைய தினம் வவுனியா வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதென முடிவு எடுக்கப்பட்டதாக வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே.இராசலிங்கம் தெரிவித்தார்.

இன்றைய தினம் தொழிலாளர்களது விடுமுறை தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த வெள்ளிக்கிழமை கூடிய வவுனியா வர்த்தக சங்கத்தின் நிர்வாகம் திங்கட்கிழமை வர்த்தக நிலையங்களை மூடுவதாக முடிவு எடுத்தது. அதன் நிமிர்த்தம் இன்று அனைத்து வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் விடுமுறை வழங்கப்படும் என தெரிவித்தார். (ம -250)

# ஐ.தே.க ஆதரவாளர்களை பார்த்து மன்னிப்புக் கோரிய பிரதமர் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்திற்கு முற்றிலும் எதிர்பார்க்காத அளவிலான ஆதரவாளர்கள் திரண்டு வந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்ட மேடையில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த அளவில் ஆதரவாளர்கள் திரண்டு வருவார்கள் என தான் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை எனச் சுட்டிக்காட்டிய பிரதமர், இத்தனையளவு ஆதரவிற்கு முன்கூட்டியே ஆயத்தமாகியிருந்தால் வேறு இடத்தில் கூட்டத்தினை ஏற்பாடு செய்திருப்போம் எனவும் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டத்தினை எதிர்பார்த்து வருகைதந்து அரங்கத்திற்கு உள்ளே இடம் கிடைக்காததால் வெளியே நிற்கும் அனைவரிடமும் தான் மன்னிப்பு கேட்டுக்கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சி நேற்று ஏற்பாடு செய்திருந்த மே தினக் கூட்டத்தில் அக்கட்சியைச் சேர்ந்த 30 முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும், வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படாததன் காரணமாகவே இவ்வாறு அக்கட்சி முக்கியஸ்தர்கள் மே தினக் கூட்டத்தை புறக்கணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பொன்சேகா வெளியிட்ட கருத்தால் ஜனாதிபதி மைத்திரி அதிருப்தி

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்ட விடயம் தொடர்பில் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பொது வெளியில் தம் மீது சுமத்திவரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தியடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தச் செய்தியில்,

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்திற்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் சரத் பொன்சேகா சட்டம், ஒழுங்கு அமைச்சர் பொறுப்பு தனக்கு வழங்கப்படாமைக்கு சர்வதேச அழுத்தமே காரணம் எனவும், கொழும்பு அரசியலில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் அரசியல் ஸ்தம்பித நிலைமைக்கு ஜனாதிபதி மைத்திரியே காரணம் எனவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அமைச்சரவை கூட்டுப் பொறுப்புக் கட்டுப்பாட்டை மீறி அரசின் தலைவரான ஜனாதிபதி மீது அமைச்சர் ஒருவர் பகிரங்கமாகப் பொது வெளியில் குற்றஞ்சாட்டியிருப்பது குறித்து ஜனாதிபதியின் ஆலோசகர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளனர் எனவும், இதன் அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரிய முறையில் பதிலளிக்க ஜனாதிபதி மைத்திரி தயாராகி வருகின்றார் எனவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக எதிர்ப்பை வெளியிட ஜனாதிபதி தயாராகியுள்ளதால் இந்தச் சூழ்நிலை கொழும்பு அரசியலில் புதிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

கடந்த கால ஊழல், மோசடியில் இருந்து ராஜபக்ஷக்களை ஜனாதிபதி மைத்திரியே காப்பாற்றி வருகின்றார் எனவும் அமைச்சர் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஒப்பந்தக் கடிதத்தின்...

முடியாதவர்களாக உள்ளனர்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக உரையாற்ற வேண்டாமென எம்மிடம் சம்பந்தன் தெரிவித்தார். ஏன் இவ்வாறு அவர்கள் செயற்படுகின்றார்கள் என்பது ஆச்சரியமாகவுள்ளது.

ஒரு தனி மனிதனாகிய என்னால் ரணில விக்கிரமசிங்கவுடன் நிபந்தனை போட முடியுமாக இருந்தால் 15 பேராக உள்ள தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் மக்களுக்காக எவ்வளவு விடயங்களை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## முள்ளிவாய்க்கால் நினைவு...

எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவுக்காக நாங்கள் மன்னார் மாவட்டத்தில் இருந்து பொது அமைப்புக்களினூடாக காணாமல் போனவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து முள்ளிவாய்க்காலுக்குச் சென்று அஞ்சலி செலுத்தவுள்ளோம்.

எங்களது இனத்தை கொத்துக் கொத்தாக அழித்ததையும், எமது இனம் பட்ட துன்பங்களையும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் சார்பாக நாங்கள் கலந்து கொண்டு நினைவு கூரவுள்ளோம்.

காணாமல் போனவர்களின் உறவுகள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கின்ற பொது அமைப்பினரும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

ஆனால் நினைவு கூரல் நிகழ்வில் அரசியல்வாதிகளை எதிர்பார்க்கவில்லை. அவர்களை குறித்த நிகழ்வில் சம்பந்தப்படுத்த நாம் விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## மகிந்த ஆட்சியின்...

யினால் மக்கள் எதுவித அச்சமும் இன்றி வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் தற்சமயம் கிரமமாக மீள செலுத்தப்படுகிறது. எதிர்கால தேர்தல்களில் வெற்றிபெறும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சி மறுசீரமைக்கப்படும். கட்சியின் பிரதான பதவிகளுக்கு இளம் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இங்கு உரையாற்றிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித்பிரேமதாஸ, கட்சி மீதான மக்களின் நம்பிக்கையை மீள கட்டியெழுப்பிய பின்னர் சாதாரண மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதே கட்சியின் நோக்கமாகும் என்று குறிப்பிட்டார்.

துன்பம் மற்றும் பல்வேறு அவலங்களிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்கே முன்னுரிமை வழங்கப்படும். கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் இரண்டாயிரத்து 500 கிராமங்கள் ஸ்தாபிக்கப்படும்.

இதுவொருபுறமிருக்க, சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை அரசாங்கம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

உழைக்கும் மக்களின் உரிமைகளை உச்ச அளவு பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

## மக்களின் காணியை விட்டு இராணு...

கேட்டறிந்து கொண்டார். மக்கள் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

அதாவது தமது இடங்களை விடுவித்துவிட்டு பிள்ளைகள் கல்வி கற்கின்ற முக்கியமான இரண்டு பாடசாலைகளை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் எந்தவித பயன்பாடும் இல்லாது அடைத்து வைத்துள்ளார்கள் என்றும் தமது பிள்ளைகள் கல்வி கற்பதற்கு ஏதுவாக உடனடியாக பாடசாலையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இதே போன்று மீளக் குடியேறிய மக்களுக்கான அடிப்படை தேவைகளான வைத்தியசாலை வசதி, போக்குவரத்து வசதி மற்றும் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்கான கடற்றொழில் உபகரணங்கள் என்பவற்றையும் பெற்றுத் தருமாறு கோரினார்கள்.

தற்போதைய இராணுவத் தளபதியாக இருக்கின்ற மகேஸ் சேனநாயக்க முன்னர் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியாக இருந்த போது விடுவிக்கப்படாத பிரதேசத்தினை எதிர்காலத்தில் சிங்கப்பூர் போன்று உருவாக்க முடியும் எனக் கூறியவர். தற்போது எமது இடங்களை எம்மிடம் தாருங்கள் என்று கேட்கும்போது அதனை தருவதற்கு மறுத்து வருகின்ற செயலானது ஏற்றுக்கொள்ள முடியாத ஏமாற்றும் செயலாகவே தாம் பார்ப்பதாக மக்கள் தெரிவித்தார்கள்.

வீதியின் முன்பகுதியில் சிறிய முகாம் போன்ற தோற்றப்பாட்டை காண்பித்துக்கொண்டு பின்பகுதியால் மிகப்பாரிய அளவில் முகாமினை விஸ்தரித்துள்ளார்கள் என்றும் விடுவிக்கப்பட்ட பகுதியில் சிறிய சிறிய முகாம்களை தற்போதும் வைத்துக்கொண்டுள்ளார்கள். இதனால் மக்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவித்தார்கள்.

தமது காணியை விடுவிக்குமாறு தாம் மீண்டும் மீண்டும் கோருகின்றபோது முதலில் விடுவித்த காணியில் வந்து குடியேறுங்கள் அதன் பின்னர் மீதிக்காணியை விடுவிக்கலாமென இராணுவத்தினர் கூறுகின்றார்கள், எங்களுடைய சொந்தகாணியைத்தான் நாம் கேட்கின்றோம்.

இராணுவத்தின் காணியை அல்ல. எனவே இராணுவம் எமது காணிகளை விட்டு விரைவாக வெளியேற வேண்டும் அவ்வாறு இல்லை என்றால் எமது காணி விடுவிப்பு போராட்டம் தொடரும் என மக்கள் முதலமைச்சரிடம் தெரிவித்தார்கள்.

விடுவிக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகத்தை அண்டிய பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளிலும், கடற்கரைப் பகுதிகளிலும் பாரிய நிலப் பரப்புக்களில் தற்போதும் இராணுவத்தினர் தென்னங்கன்றுகளை நாட்டுவதுடன் புதிதாக சீமெந்து தூண் நாட்டி முட்கம்பி வேலியை அமைத்து வருகின்றனர் என்பதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான செயற்பாடானது இராணுவத்தினர் இந்த இடங்களை விரைவாக விடுவிக்கப்போவதில்லை என்ற தோற்றப்பாட்டை காண்பிப்பதாக மக்கள் விசனத்துடன் தெரிவித்ததுடன் தொடர்ந்தும் தமது நிலங்களை மீட்டுத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

எல்லாவற்றையும் கேட்டறிந்த முதலமைச்சர் மக்களால் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் அவரால் நேரடியாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் என்பவற்றிற்கு உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி தீர்வை பெற்றுத்தருவதாக தெரிவித்தார்.

மக்களுடைய நிலங்கள் அவர்களிடம் திருப்பி கொடுக்கப்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வரும் முதலமைச்சர் மீண்டும் நேற்றைய தினமும் அதனையே வலியுறுத்தியிருந்தார்.

பூர்வீகமாக வாழ்ந்துவந்த மக்களை அவர்களது நிலத்திலிருந்து அகற்றிவிட்டு இராணுவத்தினர் அந்த இடங்களில் நிலைகொண்டிருப்பது மட்டுமல்லாது மக்களுடைய அன்றாட வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்தக்கூடிய இடங்களில் தாம் பலனைப் பெற்றுவருகின்றனர் (தோட்டம் செய்கின்றார்கள், சுற்றுலா விடுதிகளை அமைத்துள்ளார்கள்) எனவும் தெரிவித்தார்.

முதலமைச்சருடன் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரான பா.கஜதீபன், வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன், வலி வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் சஜீவன், கோபாலசிங்கம் மற்றும் முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர், வலி வடக்கு பிரதேச செயலாளர், வலி வடக்கு பிரதேச சபையின் செயலாளர் ஆகியோர் சென்றிருந்தனர். (ம-9)

## ஒப்பந்தக்கடிதத்தின் மூலப்...

கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்து கொண்ட ஒப்பந்தக்கடிதத்தின் மூலப்பிரதிகளையும் மக்கள் மத்தியில் காட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவர் மேலும் கூறுகையில்,

நாடாளுமன்றத்தில் தனக்கு உரையாற்ற அனுமதி மறுக்கப்பட்ட போது அதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி தருமாறு கோரி, எமது கட்சியின் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரனும் நானும் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்ததாகவும் அதன்பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இடம்பெற்ற நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததாகவும் பலர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதனால் அந்த சந்திப்பின் உண்மை தன்மையினை தற்போது வெளிப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

அதாவது நாம் இதன்போது அரசியல் கைதிகள் விடுதலை, மீள் குடியேற்றத்தில் உள்ள பிரச்சினைகள், காணி விடுவிப்பு, காணாமல் போனோர் ஆகிய விடயங்கள் உள்ளடக்கிய சில கோரிக்கைகளையே பிரதமருக்கு எழுத்து மூலமாக முன்வைத்தோம்.

இந்நிலையில் குறித்த கோரிக்கைக்கு பிரதமர் ரணில் உடன்பட்டதுடன், எழுத்து மூலமாக கையெழுத்திட்டு ஒப்பந்தமொன்றை வழங்கியுள்ளார்.

நாம் வெறுமனே பிரதமருக்கு ஆதரவளிக்கவில்லை. எழுத்து மூல உறுதிப்பாட்டின் அடிப்படையிலேயே ஆதரவினை வழங்கியுள்ளோம்.

ஆனால் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தனும் 3 வரவு செலவுத் திட்டத்துக்கும் ஆதரவளிக்க எவ்வித எழுத்து மூல ஒப்பந்தத்தையும் செய்ய முடியாதுள்ளது.

இதற்கு காரணம் அவர்கள் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதால் எதனையும் கோர 23☛

## முகவரி கேட்பது...

டின் வாயிலின் முன்பாக நின்ற 73 வயதான பெண்ணொருவரிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் முகவரி கேட்பது போல் பாசாங்கு செய்துவிட்டு அவரின் கழுத்திலிருந்த 2 பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

அப்பெண் கூச்சலிட்டமையால் வீட்டிலிருந்து வெளியே வந்தவர்கள் திருடர்களை துரத்திச்சென்ற போதும் அவர்கள் தப்பித்துச் சென்றுவிட்டனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமையால் மக்கள் திருடர்களுக்கு அஞ்சிய நிலையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தெற்கில் இன்று...

அறிவித்திருந்தது.

இந் நிலையில் தெற்கில் அரசியல் கட்சிகளால் தொழிலாளர் தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது.

மே முதலாம் திகதி வடக்கில் தமிழ்க் கட்சிகளால் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

45 நாட்கள் நிரம்பிய டாசோன் (Dashon) நாய்க்குட்டிகளும் 1 வருடம் நிரம்பிய பெண் பொமேரியன் நாயும் விற்பனைக்கு உண்டு.

(3878)

**077 297 6255**

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

**45,000 - 80,000/- உடன்**

சவுதி அல் மராய் நிறுவனத்தில் உடனடி

**வேலைவாய்ப்புக்கள்**

மெக்கானிக், A/C, குளிரூசாதனப்பெட்டி டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், பெயின்டர், காப்பென்டர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்

மே மாதம் பயண ஏற்பாடு

விபரங்களுக்கு 0777 324 004

SIKARAM ACADEMY — FAST TRACK to CAREERS — Sri Lankan Entrepreneur of the Year 2017

221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
www.sikaram.lk

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1
www.tgl.lk

**பணியாளர் தேவை**

எமது நிறுவனத்தின் சகல பணிகளிலும் திறமையுடன் செயற்படக்கூடிய சுறுசுறுப்பு மிக்க பெண் பணியாளர்கள் தேவை

(வயது விபரம் - 25 வருடத்திற்குள்)

தமிழ் எழுத்தறிவு கட்டாயம்

ஆங்கிலம்,கணினி அறிவு ஓரளவு தேவை

தேவையான பயிற்சிகள் வழங்கப்படும்

அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை

பணிவிபரம் ,சம்பளவிபரம் போன்றவை தொடர்பாக நேரில் வந்து அறிந்து கொள்ளலாம். அலுவலக நேரங்களில் உடன் நேரில் வரவும்

(C-2516)

தூரிகை - மத்திய கல்லூரி வீதி,நெல்லியடி (இல:11,பொன் கந்தையா ஒழுங்கை)

**கேக் அலங்கரிப்பு தொழிற் பயிற்சி**

தூரிகையின் பயிற்சி மையத்தில் சான்றிதழுடன் கூடிய தொழில்சார் தரத்திலான

**கேக் அலங்கரித்தல் (கேக் ஐசிங்)**

புதிய பயிற்சி அணியின் வகுப்புக்கள்

**9.5.2018 முதல்**

திங்கள், புதன் காலை 10 மணிக்கு நடைபெறும் வெளிநாட்டிலும் தாயகத்திலும் தொழில் ரீதியாக செய்ய விரும்புவோர்க்கு உகந்ததான இப்பயிற்சி இரண்டரை மாதங்கள் கொண்டதாகும் மேலும் விபரங்களுக்கு எமது அலுவலகத்திற்கு வருகை தாருங்கள் (காலை 9முதல் மாலை 5வரை)

(C-2516)

**தூரிகை** - மத்திய கல்லூரி வீதி,நெல்லியடி

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக.
- அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

021 222 3536

(C-2007)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.